

# வருங்காலச் சந்ததிக்கு ஆரோக்கியமான கரையோர மற்றும் கடல்சார் சூழலொன்றை உருவாக்குவதற்கு நாம் அர்ப்பணிப்பினைக் கொண்டிருப்போமாக



## ஆண்டு அறிக்கை 2017

கடல்சார் சூழல்
பாதுகாப்பு அதிகார சபை

மகாவலி அபிவிருத்தி, சூழல்
அமைச்சு



# உள்ளடக்கங்கள்


| | | | |
|---|---|---|---|
| 1. | பின்னணி | | |
| | 1.1 | அறிமுகம் | 11 |
| | 1.2 | அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள் | 11-13 |
| 2. | நிருவாக அறிக்கை | | 14-16 |
| 3. | கணக்காய்வு, முகாமைத்து குழுவின் அறிக்கை | | 17-18 |
| 4. | தொழிற்பாடுகளின் மதிப்பாய்வு | | 19-34 |
| 5. | நிருவாக, சட்ட, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளகக் கணக்காய்வு, மற்றும் நிதிப் பிரிவுகளின் சேவைகள் மற்றும் பொறுப்புக்கள் | | |
| | 5.1 | நிருவாகப் பிரிவு | 35 |
| | 5.2 | சட்டப் பிரிவு | 35 |
| | 5.3 | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 35-36 |
| | 5.4 | மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு | 36-40 |
| | 5.5 | திட்டமிடல் பிரிவு | 41 |
| | 5.6 | நிதிப் பிரிவு | 41-43 |
| 6. | அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கைகள், நிதிசார் கூற்றுக்கள் மற்றும் அதிகார சபையின் குறிப்புகள் | | |
| | 6.1 | கணக்கீட்டுக் கொள்கைகள் | 44-46 |
| | 6.2 | 31.12.2017இல் உள்ளவாறு நிதிசார் நிலையின் கூற்று | 47 |
| | 6.3 | 31.12.2017இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் தொழிற்பாடுகளின் கூற்று | 48 |
| | 6.4 | 31.12.2017இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிகர சொத்துக்களினதும், உரித்துரிமைகளினதும் மாற்றங்களின் கூற்று | 49 |
| | 6.5 | 2017ஆம் ஆண்டுக்கு பணப்பாய்வு கூற்று | 50 |
| | 6.6 | நிதிசார் கூற்றுக்களின் மீதான குறிப்புகள் | 51-67 |
| | 6.7 | 2013இலிருந்து 2017 வரையிலான ஆண்டுகளுக்கான நிதிசார் நிலையின் கூற்றுக்கள் | 68-69 |
| | 6.8 | 2013இலிருந்து 2017 வரையிலான ஆண்டுகளுக்கான நிதிசார் நிலையின் கூற்றுக்கள் | 70 |
| 7. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | | 71-84 |




1981இன் முன்னாள் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் இல. 59இன் கீழ் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும் அத்துடன் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் இலங்கைக்கு பிரயோகித்தக்க கடல்சார் தீழ்ப்பு மீது சர்வதேசச் சமவாயங்களை அமுல்படுத்துவதற்கும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் சட்டபூர்வ அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்காக புதிய 2008இன் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இல.35 இயற்றப்பட்டதுடன், இது 2009 ஜனவரி 01 அன்று செயற்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டது.

# கூட்டாண்மைத் தகவல்

## அதிகார சபையின் பெயர்:

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை

### சட்டபூர்வ நியதியாக்கங்கள்

**2008இன் கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இல.35இன் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு கட்டுப்படுத்தும் அதிகார சபை**

### பதிவு செய்யப்பட்ட விலாசம் மற்றும் தலைமை அலுவலகம்

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல.177, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.

தொலைபேசி: 011 2554006/011 2554373
∴பக்ஸ்: 011 2556505/011 2554173
ஈ-மெயில்: info@mepa.gov.lk இணையதளம்: mepa.gov.lk

## பணிப்பாளர் சபை

### தலைவர்

01. ரியர் அட்மிரல் (இளைப்பாறிய)
ரொஹான் பெரேரா
அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்

### பணிப்பாளர்கள்

02. திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க
மேலதிகச் செயலாளர்,
மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு

03. திரு.என்.எல்.எம்.பீ.லியனகே
ஜனாதிபதிக்கான பாராளுமன்றச் செயலாளர்

04. திரு.எ.டபிள்யு.செனிவிரத்ன
பணிப்பாளர் நாயகம், வணிகக் கப்பற்றுறை திணைக்களம்

05. திரு.எஸ்.ஐ.எம்.ரோஸா
பணிப்பாளர், தேசிய வரவு-செலவுத்திட்டத் திணைக்களம்

06. திரு. மகேந்திர பெரேரா
(அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்)

07. திரு.போஷித பெரேரா
பணிப்பாளர், வெளிவாரி அலுவல்கள் அமைச்சு

08. திருமதி சேபாலிகா விக்ரமசிங்க
பணிப்பாளர், கடற்றொழில் அமைச்சு

09. கொமொடோர் திரு.பி.டி.எஸ்.டயஸ்
பணிப்பாளர், இலங்கைக் கடற்படை

10. கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் குமார
பொது முகாமையாளர்


பணிப்பாளர் சபை
தலைவர்
பொது முகாமையாளர் 01
பிரதி பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) 01
பிரதி பொது முகாமையாளர் (நிருவாகம், நிதி) 01
முகாமையாளர் (செயற்பாடுகள்) 01
முகாமையாளர் சட்டம் 01
முகாமையாளர் திட்டமிடல் 01
முகாமையாளர் நிருவாகம்/HRD 01
முகாமையாளர் நிதி
உள்ளகக் கணக்காய்வாளர் 01
உதவி முகாமையாளர் 1. தெற்கு 01 2. மேல், வட மேல் 01 3. கிழக்கு, வடக்கு 01
உதவி முகாமையாளர் மாகாணம் 01
உதவி முகாமையாளர் செயற்பாடு 01
உதவி முகாமையாளர் கப்பல் அளவீடு 01
உதவி முகாமையாளர் சட்டம் 01
உதவி முகாமையாளர் திட்டமிடல் 01
உதவி முகாமையாளர் நிருவாகம் 01
உதவி முகாமையாளர் HRD 01
உதவி முகாமையாளர் நிதி 01
கடல்சார் சூழல் அலுவலர் 11
கடல்சார் சூழல் அலுவலர் 01
கடல்சார் சூழல் அலுவலர் 01
கடல்சார் சூழல் அலுவலர் 01
ஊடக அலுவலர் 01
நிருவாக அலுவலர் 01
தகவல் தொழில்நுட்ப அலுவலர் 01
நிதி அலுவலர் 01
உதவி கடல்சார் சூழல் அலுவலர் 28
உதவி கடல்சார் சூழல் அலுவலர் 01
உதவி கடல்சார் சூழல் அலுவலர் 05
உதவி கடல்சார் சூழல் அலுவலர் 02
உதவி கடல்சார் சூழல் அலுவலர் 02
செயலாளர் 02
முகாமைத்துவ உதவியாளர் 02
முகாமைத்துவ உதவியாளர் 02
முகாமைத்துவ உதவியாளர் 01
முகாமைத்துவ உதவியாளர் 01
முகாமைத்துவ உதவியாளர் 01
முகாமைத்துவ உதவியாளர் 01
முகாமைத்துவ உதவியாளர் 09
முகாமைத்துவ உதவியாளர் 03
முகாமைத்துவ உதவியாளர் 08
சாரதி 03
சாரதி 12
MPP கள உதவியாளர் 58
ஆய்வுகூட உதவியாளர் 01
MPP கள உதவியாளர் 06
அலுவலக உதவியாளர் 06
அலுவலக உதவியாளர் 05
HM 2-1 (01)
HM 1-3 (02)
HM 1-1 (03)
MM 1-1 (12)
JM 1-2 (17)
JM 1-1 (1)
MA 5-1 (38)
MA 2-2 (02)
MA 1-2 (38)
PL 3 (15)
PL 2 (65)
PL 1 (11)

# அதிகார சபையின் முகாமைத்துவக் குழாம்

| பதவிப்பெயர் | பெயர் | தகைமை |
|---|---|---|
| தலைவர் | ரியர் அட்மிரல் (இளைப்பாறிய) ரொஹான் பெரேரா - RSP, VSV, USP | |
| பொது முகாமையாளர் | கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் குமார | B.Sc. Special (Zoology), Ph.D. |
| பதில் பிரதி பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) | திரு.எ.ஜே.எம்.குணசேகர | BSc, M.Sc (NRM), MSc. (Maritime Affairs) |
| முகாமையாளர் சட்டம் | செல்வி எ.காரியவசம் | LLB, M.Sc (Maritime Law and Policy ) |
| கணக்காளர் | திரு.டி.ஆர்.சி.ஜயவர்தன | B.Com. SP, M Bus (Accounting)/LICA |
| பிரதி முகாமையாளர் (மேல் மற்றும் வட மேல் மாகாணம்) | திருமதி ரி.எஸ்.ரணசிங்க | B.Sc, M.Sc. (Env. Sc) M.Sc. (Maritime Affairs) |
| பிரதி முகாமையாளர் (தென் மாகாணம்) | திருமதி ஆர்.பி.ரணவீர | B.Sc. SP (Hons), M.Sc. (NRM) |
| பதில் உதவி முகாமையாளர் (வட மற்றும் கிழக்கு மாகாணங்கள்) | திரு.ரி.சிறீபதி | B.Sc, M.Sc (Env. Sc) |
| உதவி முகாமையாளர் (மாகாணம்) | திரு. எச்.ரி.என்.ஐ.பியதாச | B.Sc, M.Sc. (NRM), M.Sc. (Maritime Affairs) |
| உதவி முகாமையாளர் (கப்பல் அளவீடுகள்) | திரு. ஆர்.என்.பிரியதர்ஷன | B.Sc, NDES |
| உதவி முகாமையாளர் (மனித வளங்கள்) | திருமதி டபிள்யு.எச்.கே.ஹிட்டிபண்டார | B.Sc |
| உதவி முகாமையாளர் (திட்டமிடல்) | திரு.கே.பி.கே.ரி.யு.பெர்னாண்டோ | B.Sc (Hons), PGD (Applied Statistics) |
| உதவி முகாமையாளர் (செயற்பாடுகள்) | திரு.ரி.ஜி.ஐ.பி.அமரநாயக்க | B.Sc. SP (Hons), M.Sc (DAMm) |
| உள்ளகக் கணக்காய்வாளர் | திரு.டபிள்யு.எ.புபுது உதான | EDBA (Col), AMA (CMASL), ICBA, SMAAT, Intermediate (CASL), CBA (CASL) |
| உதவி முகாமையாளர் (நிருவாகம்) | திரு. எஸ்.எம்.சி.குமாரகே | B.B. Mgt. (Sp.)(HRM) |
| நிருவாக அலுவலர் | திருமதி ஜி.பி.நிலாஞ்ஜனி | B.A (Hons/Sp) |
| ஊடக அலுவலர் | திரு. சௌமியா ஏகநாயக்க | B.A (Hons/Sp) Dip. Mass Com, Dip. Television |
| IT அலுவலர் | திரு.எ.எம்.நெஹ்மத்துல்லா | B.Sc (Hons) Technology & E Commerce, MCTS |

## கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்

**1. மேற்கு மற்றும் வட மேற்கு மாகாண அலுவலகம் மற்றும் கொழும்பு மாவட்ட அலுவலகம்**
இல.177, நாவல வீதி, நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05.
தொலைபேசி: 2554078/071 3462298
∴பக்ஸ்: 011 2556505/011 2554173

**2. மாவட்ட அலுவலகம் - களுத்துறை மாவட்டம்**
**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை**
இல. 28 ககபத வீதி, களுத்துறை
தொலைபேசி: 034 2221790/071 2666456
∴பக்ஸ்: 034 2221790

**3. தென் மாகாண அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம் - காலி**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
426/B, கொழும்பு வீதி, தடல்ல, காலி.
தொலைபேசி: 091 2233549/091 2233547/ 0718214184
∴பக்ஸ்: 091 2233549

**4. மாவட்ட அலுவலகம் - மாத்தறை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல.18 வில்மட் பாலசூரிய மாவத்தை,
நூபே, மாத்தறை.
தொலைபேசி: 041-2234250/ 071-4926849
∴பக்ஸ்: 041-2234250

**5. மாவட்ட அலுவலகம் - ஹம்பாந்தோட்டை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
46, இரண்டாவது தளம், நிருவாகத் தொகுதி,
சிரிபோபுர, ஹம்பாந்தோட்டை.
தொலைபேசி: 047-2222372/071-3624651
∴பக்ஸ்: 047-2256372

**6. மாவட்ட அலுவலகம் - அம்பாறை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
பிரதேச சபைக் கட்டிடம்,
பட்டின சபை வீதி, தம்புலுவில்
தொலைபேசி: 067 226516
∴பக்ஸ்: 067 226516

**7. கிழக்கு மாகாண அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகம் - திருகோணமலை மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
04ஆவது மைல் கல், சீனன்குடா, திருகோணமலை.
தொலைபேசி: 026-2050805/071-8383363
∴பக்ஸ்: 026-2050805

**8. மாவட்ட அலுவலகம் - யாழ்ப்பாணம் மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 0212212663
∴பக்ஸ்: 0212212663

**9. மாவட்ட அலுவலகம் - புத்தளம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
நுக செவன – பகுதி B, பிராந்திய வள அபிவிருத்தி
அதிகார சபைக் கட்டிடம், பபல
தொலைபேசி: 032 2222865/071406600
∴பக்ஸ்: 0322222865

**10. மாவட்ட அலுவலகம் - கம்பஹா மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல. 704/9A, 2ஆவது கருணா,
கொழும்பு வீதி, நீர்கொழும்பு
தொலைபேசி: 031-2228606/718-325678
∴பக்ஸ்: 031-2228606

**11. மாவட்ட அலுவலகம் - மன்னார் மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
மாவட்ட அலுவலகம், மன்னார்
தொலைபேசி: 023 2251758
∴பக்ஸ்: 023 2251758

**12. மாவட்ட அலுவலகம் - மட்டக்களப்பு மாவட்டம்**
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
இல.03, பிள்ளையார் கோவில் வீதி,
முதலாவது குறுக்கு வீதி,
கல்லடி, மட்டக்களப்பு
தொலைபேசி: 065 2224979

# தலைவரிடமிருந்து செய்தி

2017ஆம் ஆண்டுக்கு வருடாந்த அறிக்கைக்கு இந்த செய்தியை விடுப்பது மகிழ்ச்சிக்குரிய தாகும்.

இலங்கையின் கடல்சார் பிராந்தியத்தில் இடம்பெறுகின்ற கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்கும், தணிப்பதற்கும் மற்றும் கட்டுப்படுத்துவதற்கும் 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை செயற்படுகின்றது.

உள்நாட்டுரீதியாகவும், உலகளாவியரீதியாகவும் முன்வைக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களிலிருந்து கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்கும் அத்துடன் தற்போது நிலவுகின்ற சூழல்ரீதியான பிரச்சனைகளை அடையாளங்காண்பதற்கும் அத்துடன் தீர்த்து வைப்பதற்கும் புதிய ஆலோசனைகளைப் பெறுவதை நோக்கி சமூகத்தில் கலந்தாய்வொன்றைத் தூண்டு வதைக் குறிக்கோளாகக் கொண்டு கடல்சார் சூழல் துறைக்கு தொடர்பான சகல துறைகளையும் உள்ளடக்கி மூன்றாவது தடவையாக தேசிய கடல்சார் சூழல் ஆய்வரங்கு நடத்தப்பட்டது.

கடற்றொழில் கைத்தொழிலுடன் இணைந்துள்ள செயற்பாடுகளின் காரணமாக இடம்பெறுகின்ற கடல்சார் தீழ்ப்பினைப் பாதுகாப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் நிருவகிப்ப தற்குமான தேசிய மூலோபாயங்களை வகுத்தமைத்தல் அதிகார சபையின் தலையீட்டினாலும் வழிகாட்டலினாலும் மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம், வெகு விரைவில் கடற்றொழில் அமைச்சு, கடற்றொழில் திணைக்களம் மற்றும் கடற்றொழில் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் ஆகியவற்றுடனான கூட்டுமுயற்சியுடன் உத்தேசமான மூலோபாயங்கள் அமுல்படுத்தப் படும்.

முன்னோடி கருத்திட்டமொன்றாக இலங்கை யைச் சுற்றி தூய்மையான கரையோர வலயமொன்றைக் கொண்டுவருவதற்காக அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் கீழ் அதிகார சபையின் நிதியங்களைப் பயன்படுத்தி சமுத்திரத்தினுள் கழிவுநீர் பாய்வின் ஊடாக வடிகால் முறைமையை உள்ளடக்குவது நடத்தப்பட்டது. இதுவரையிலும் சமுத்திரத்திற்கு நேராக பாய்ந்ததும், அத்துடன் சமுத்திரத்தில் அதைச் சரிவர ஒழிப்பதற்கும் கழிவைத் திரட்டுவதற்கான வாய்ப்பினை இது வழங்கியது. முன்னோடி கருத்திட்டத்திலிருந்து கற்கப்பட்ட பாடங்களுடன் இலங்கை முழுவதும் சகல மாவட்ட அலுவலகங்களினால் அமுல்படுத்தப் படுவதற்கு இந்த முறைமையியல் முன்மொழியப்பட்டது.

செயல்திட்டத்தின் பிரகாரம் 2017ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 90 மில்லியன் ஒதுக்கீட்டின் மூலதன ஏற்பாட்டிலிருந்து, 93% கொண்ட பௌதீக முன்னேற்றமொன்றுடனும் அத்துடன் 67% கொண்ட நிதிசார் முன்னேற்றமொன்றுடனும் ஆண்டின் போது ரூபா 84 மில்லியன் செலவழிக்கப்பட்டது. திறைசேரி ஒதுக்கீடுகளின் கைமாற்றமின்மை அல்லது தாமதம் ஆகியவற்றினால் நிதிசார் முன்னேற்றத்தின் குறைப்பு பிரதானமாக விளைந்துள்ளது.

ஏற்கனவே விளைவிக்கப்பட்ட கெடுதலை தணிப்பதற்கும் அத்துடன் 2017இல் இடம்பெற்ற பெருமளவு எண்ணெய் சிந்துதல்களினால் இடம்பெற்ற சேதத்தை தடுப்பதற்கும் அத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பின் உதவியைப் பெறுவதன் மூலம் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரசபையினால் இயலக்கூடியதாகவிருந்தது. 2017ஆம் ஆண்டில் அதிகார சபையினால் கடல்சார் தீழ்ப்புச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அத்துடன் நிருவகிப்பதற்கும் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஆகியோரிடமிருந்து கிடைத்த தலைமைத்து வத்திற்கும் மற்றும் வழிகாட்டலுக்கும் அத்துடன் பிரதி அமைச்சரினாலும் மற்றும் அமைச்சுக்கான செயலாளரினாலும் வழங்கப்பட்ட ஆலோசனை க்கும், ஆதரவுக்கும் அத்துடன் பணிப்பாளர் சபையினாலும், பொது முகாமையாளரினாலும், பிரதி பொது முகாமையாளரினாலும் மற்றும் பணியாளரினாலும் நீடிக்கப்பட்ட உதவிக்கும் நன்றிக்கடனைப் பதிவுசெய்வதற்கு நான் விரும்புகின்றேன்.

றியர் அட்மிரல் (இளைப்பாறிய)
ரோஹன பெரேரா, *RSP, VSV, USP*
தலைவர்

# பொது முகாமையாளரிமிருந்து செய்தி

2017ஆம் ஆண்டுக்கு வருடாந்த அறிக்கைக்கு இந்த செய்தியை விடுப்பது மகிழ்ச்சிக்குரிய தாகும்.

2017ஆம் ஆண்டில் அதிகார சபையினால் முகங்கொடுக்கப்பட்ட சவால்களை வெற்றி கொண்டு மிகவும் முறைப்படியானதும், தோதானதுமான தன்மையில் கடல்சார் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை அமுலாக்குவது சாத்தியமாகியது. கடல்சார் சூழலைப் பாதுகாப்பதில் மூலோபாயத்தினாலானதும் மற்றும் ஒன்றிணைந்ததுமான முறைமையியல் களை அமுலாக்குவதற்கும் அத்துடன் 2017ஆம் ஆண்டில் துறையில் செயல்விளைவாக செயற்பாட்டினுள் இடுவதற்கு அவசியமான பொறிமுறையைத் தாபிப்பதற்கும் அடித்தளத்தை அதிகார சபை இட்டது.

தேசிய பொருளாதாரத்தில் தேசிய கொள்கை களையும், போக்குகளையும் வகுத்தமைப்பதில் சுற்றுலாத்துறையில் துரிதமான வளர்ச்சியினதும் மற்றும் கடல்சார் சூழலை நோக்கி ஈர்த்தெடுக்கப்படும் விசேட கவனமெடுப்பினதும் காரணமாக, கடல்சார் சூழலைப் பாதுகாப்பதை நோக்கி சமூக ஊடகங்கள் ஊடாக விளைவிக்கப்படுகின்ற கடல்சார் சூழலைப் பாதுகாப்பதினதும் மற்றும் நிருவகிப்பதினதும் முக்கியத்துவம் தொடர்பில் சமூகத்தில் கடல்சார் சூழல் தீழ்ப்பினதும் அத்துடன் கலந்தாய்வொன்றை கட்டியெழுப்புதலினதும் மூலங்களை அடையாளங்காண்பதன் மூலம் வருங்கால சந்ததிக்கு உச்சத்திலான கடல்சார் சூழலொன்றை விட்டு வைக்கின்ற மிகவும் சீரியதும், பொறுப்பானதுமான பணியில் நாம் ஈடுபட்டிருக்கின்ற இந்த வேளையில், இலங்கையின் சமூகத்தின் அங்கம் மீது விழிப்பியல் அர்ப்பணிப்பும், ஒன்றுகூடுதலும் அத்தியாவசியமானவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதன் ஆரம்பத்திலிருந்து அதிகாரசபையின் தொழிற்பாட்டிலான செயற்பாடுகள் படிப்படியாக விஸ்தரித்ததுடன், முழு தீவகத்தை உள்ளடக்கி அவற்றை வலைப்பின்னலிடுவதற்கும் அத்துடன் அமுலாக்குவதற்கும் சாத்தியமாகியது.

நிலைத்திருக்கத்தக்க வழிவகைகள், வெற்றிட மாகவுள்ள பணியாளருக்கு ஆட்சேர்ப்பது அத்துடன் அலுவலர்களுக்கு பயிற்சி வாய்ப்புக்களை அதிகரித்தல் ஆகிய நிலைத் திருக்கத்தக்க வழிவகைகள் ஊடாக தீழ்ப்பு அற்ற கரையோரக் கடல்சார் சூழலைப் பராமரிப்பதற்கு புதுமையான முறைமையியல் களையும் மற்றும் மூலோபாயங்களையும் அதிகார சபை இன்னுமே ஆராய்கின்றது.

கடல்சார் சூழலைப் பாதுகாப்பதிலும் அத்துடன் கடல்சார் சூழலின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்கு அவற்றை நிருவகிப்பதிலும் முகங்கொடுக்கப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதில் அவர்களது வழிகாட்டலுக்காகவும், ஆதரவுக்காகவும் அதிமேன்மை தங்கிய ஜனாபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சர் ஆகியோருக்கும், கடல்சார் சூழலைப் பாதுகாக்கும் மாபெரும் பொறுப்பினை தோளில் சுமப்பதில் என்னுடன் கைகோர்த்த கௌரவ பிரதி அமைச்சர் அனுராத ஜயரட்ன, அமைச்சுக்கான செயலாளர் மற்றும் அவரது பணியாளர், தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினர் அத்துடன் பணியாட் உறுப்பினர்கள் ஆகியோருக்கும் நன்றி தெரிவிப்பதற்கு நான் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக்கொள்கின்றேன்.

கலாநிதி பி.பீ.தேர்னி பிரதீப் குமார
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர்



## தொலைநோக்கு

“நிலைத்திருத்தல் தேசிய அபிவிருத்திக்கும், இலங்கை மக்களின் சேமநலனுக்கும் மற்றும் பொருளாதாரத்திற்கும் இலங்கையைச் சுற்றி தீழ்ப்பு அற்ற கடல்சார் சூழலை உருவாக்குதல்”

## செயற்பணி

“தற்போதையதும், எதிர்காலத்திற்கு மானதுமான சந்ததிகளின் கடல்சார் சுற்றாடலின் நிலைத்திருத்தல் முகாமைத் துவத்திற்கு பயனுறுதிவாய்ந்த ஒழுங்கு விதிகளின் வினைப்படுத்தலினதும், சம்பந்தப்பட்ட சர்வதேச சமவாயங்களினதும் பங்காளரின் ஒருங்கிணைப்பினதும் மற்றும் ஒன்றுதிரட்டலினதும் மற்றும் வேறு மூலவளங்களினதும் அமுலாக்கத்தினதும் ஊடாக இலங்கையின் நீர்ப்பரப்புக்களில் கடல் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், கட்டுப் படுத்துவதற்கும், முகாமை செய்வதற்கும் அவசியமான திறன்களுடனும், தகுதியுடனும், தாபனரீதியான கட்டமைப்பினதும் மற்றும் உட்கட்டமைப்பு வரைச்சட்டத் தினதும் முகவராண்மையொன்றாக இருத்தல்.”

# 1. பின்னணி

## 1.1 அறிமுகம்

தீவகமொன்றாக, இந்து சமுத்திரத்தில் கேந்திர முக்கியத்துவமான நிலையொன்றில் இலங்கை அமைந்துள்ளது. சர்வதேசச் சட்டங்களின் பிரகாரம், அதன் நிலப்பரப்பின் அளவின் எட்டுத் தடவைகளுக்கு மேலாக பரந்த கடல்சார் பிராந்தியமொன்றில் மூலவளங்களைப் பெறுவதற்கு இலங்கை உரித்தினைக் கொண்டுள்ளது. எமது நாட்டுக்குச் சொந்தமான சமுத்திரப் பிராந்தியத்தின் வழியே கிழக்கையும், மேற்கையும் சர்வதேச கப்பற் துறை வழிகள் இணைக்கின்றன. இலங்கைக்குச் சொந்தமான ஆள்புல நீர்கள் பெருமளவு மூலவளங்களுடன் வளமானது என்பதுடன், இவை கப்பல்களின் ஓட்டத்தினதும், நிலத்தில் மனித செயற்பாடுகளினதும் காரணமாக படிப்படியாக தீழ்ப்படைகின்றது.

இதனால் எமது சமுத்திர மூலவளங்களை தீழ்ப்பின்றி பராமரிக்குமுகமாக 1981இன் இல.59 கடல்சார் தீழ்ப்புத் தடுப்பு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகார சபை அமைக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்திற்கு பிரயோகிக்கத்தக்க கடல்சார் தீழ்ப்பு மீதான சர்வதேச சமவாயத்தை அமுல்படுத் காகவும், கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பதற்காகவும், தணிப்பதையும் அத்துடன் கட்டுப்படுத்து வதையும் செயற்படுவதற்காகவும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையில் உடமையாக்கப்பட்டுள்ள சட்ட அதிகாரங்களை பலப்படுத்துவதற்காக 2008இன் இல.35 புதிய கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டதுடன், இது 2009 ஜனவரி 01 அன்றிலிருந்து செயற்படும் விதத்தில் அமுலாக்கப்பட்டது. இச் சட்டத்தின் பிரகாரம் புதிய அதிகாரச்சட்டத்தினால் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையாக அதிகார சபையின் பெயர் மாற்றப்பட்டது.

2015இல் அதிகாரத்திற்கு வந்த புதிய அரசாஙகத்தின் தூரநோக்கின் படி, கடற்படை முனையொன்றாக இலங்கையை அபிவிருத்தி செய்தல் பிரதான நோக்கங்களில் ஒன்றாகும். இந்த நோக்கத்தின் பிரசன்னத்தில் புதிய துறைமுகங்களின் நிருமாணமும், நடைமுறையிலான துறைமுகங்களின் மேம்படுத்தலும் செய்யப்பட்டன. மேலதிகமாக, கடல்சார் மூலவளங்களைப் பெறுவதற்காக நிகழ்ச்சித் திட்டங்கள் வகுத்தமைக்கப்படு கின்றன. எனவே, அபிவிருத்தி நடவடிக்கை ஊடாக இடம்பெறுகின்ற தீழ்ப்பினைக் குறைந்த பட்சமாக்குவதற்கும், இந்த கைத்தொழில்களின் நிலைத்திருக்கும்தன்மையை பராமரிப்பதற்கும் இந்த அதிகார சபையின் பங்கு மீதான பங்களிப்பு அவசியமானதாகும்.

இதன் பிரகாரம், கடல்சார் சூழலின் தீழ்ப்பினை குறைந்தபட்சமாக்குவதற்கும், தணிப்பதற்கும் அத்துடன் முகாமைத்துவம் செய்வதற்கும் நிறுவனம் குறித்தொதுக்கப்பட்டுள்ளதனால், பெருமளவு செயற்றிட்டங்களை இந்த அதிகார சபை அமுலாக்கியது.

## 1.2 அதிகார சபையின் பொறுப்புக்கள் மற்றும் பணிகள்

### அதிகார சபையின் பணிகள்

(அ) கடல்சார் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டத்தினதும், அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினதும் ஏற்பாடுகளை பயனுறுதியாகவும், திறமையாகவும் நிருவகித்தலும், நடைமுறைப்படுத்தலும்.

(ஆ) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக் களில் அல்லது அதன் முற்கரையில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் அதன் கரை மீது கப்பல்சார்ந்த செயற்பாட்டிலும், கடல்சார் கரையோரம் தொடர்பான நடவடிக்கையிலும் இருந்து எழும் தீழ்ப்பைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்குமான செயற்றிட்ட மொன்றை வகுத்தலும், நிறைவேற்றுதலும்.

(இ) இலங்கையின் ஆள்புல நீர்ப் பரப்புக் களில் அல்லது அதன் முற்கரையில் அல்லது இலங்கையின் கரையோர வலயத்தில் அதன் கரை முனங்கிலும் அல்லது இலங்கையின் கரையோர வலயத்திலும் ஏதேனும் கப்பல்

சார்ந்த செயற்பாட்டினின்று அல்லது கடல்சார் கரைசார்ந்த கடலோரம் தொடர்பான செயற்பாட்டினின்று எழும் தீழ்ப்பைத் தடைசெய்யும், குறைக்கும், கட்டுப் படுத்தும் அத்துடன் முகாமை செய்யும் நோக்கத்திற்காக அரசாங்க மற்றும் தனியார் துறை திணைக்களங்களுடனும் முகவராண்மை களுடனும் நிறுவனங்களுடனும் கூட்டிணைந்து ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(ஈ) இலங்கையின் கடற்கரையையும் மற்றும் அதன் கரையோர வலயத்தையும், அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள இலங்கையின் அல்லது ஏதேனும் வேறு கரைசார்ந்த வலயத்தின் ஆள்புல நீர்ப்பரப்புக்களையும் நிருவகிப்பதற்கும், பாதுகாப்பதற்கும், பேணிக் காப்பதற்குமான நடவடிக்கைகளை எடுத்தல்.

(உ) ஏதேனும் எண்ணெய்க்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தத்திற்கு அல்லது வேறு ஏதேனும் தீழ்ப்பாக்கிக்கு போதியளவிலும், பயனுறுதியுடையதுமான ஏற்பு வசதிகளை வழங்குதல்.

(ஊ) இலங்கை அரசாங்கம் ஏற்றங் கீகரித்துள்ள, ஏற்றுக்கொண்டுள்ள, இணங்கி யுள்ள அல்லது அங்கீகரித்துள்ள கடல்சார் தீழ்ப்பைக் கையாளும் எல்லா சர்வதேச சமவாயங்களையும், இயைபான பின்னேடு களையும் கடைப்பிடிப்பதனை விதந்து ரைத்தலும், பரிந்துரைத்தலும்

(எ) தேசிய எண்ணெய் தீழ்ப்பு எதிர்பாரா திட்டத்தை வகுத்தமைத்தலும், நடைமுறைப் படுத்தலும்.

(ஏ) பெற்றோலியம் அல்லது அது தொடர் பான செயற்பாடுகள் உட்பட இயற்கை வளங்களின் நுண்ணாய்வை மேற் கொள்ளும் அல்லது அதில் ஈடுபட்டுள்ள ஒப்பந்தக்காரர் களினதும், சேவைத் துணை ஒப்பந்தக்காரர் களினதும் எவரேனும் ஆளினதும் நடத்தையை மேற்பார்வை செய்தலும், ஒழுங்குபடுத்துதலும், கண்காணித்தலும்.

(ஐ) கடல்சார் சூழலைப் பேணிக் காக்கும் அவசியம் பற்றி சமுதாயத்தின் வெவ்வேறு குழுக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கு தல்.

(ஒ) மேற்கூறப்பட்ட பணிகள் எல்லா வற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் அல்லது விடயங்களையும் மேற்கொள்ளுதல்.

**அதிகார சபையின் அதிகாரங்கள்**

(அ) இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புக்கள் அல்லது கடல்சார்ந்த வலயங்கள் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அல்லது அத்தகைய சட்டத்தின் கீழ் எதிர்காலத் திகதியொன்றில் பிரகடனப்படுத்தப்படவுள்ள ஏதாவது வேறு கடல்சார்ந்த வலயத்தை ஏதாவது கப்பல் அடிப்படையிலான அல்லது கடல் அடிப்பை டயிலான கடல்சார்ந்த தொடர்பிலான நடவடிக்கையினால் பயனுறுதியுடன் பாது காத்தலும், பேணிக் காப்பாற்றுதலும்.

(ஆ) ஏதாவது கப்பல் அடிப்படையிலான நடவடிக்கைகளிலிருந்து அல்லது கரை அடிப்படையிலான நடவடிக்கையிலிருந்து எழுகின்ற ஏதாவது தீழ்ப்பு தொடர்பில் ஆய்வு களையும், விசாரணைகளையும் நடத்துதலும், சட்ட நடவடிக்கையை ஆரம்பித்தலும்.

(இ) தீழ்ப்பின் தடுத்தல் நோக்கத்திற்காக இலங்கையின் அல்லது அதன் கடற்கரையின் அல்லது கரையோர வலயத்தின் ஆள்புல நீர்களில் அல்லது ஏதாவது வேறு கடல்சார் வலயத்தில் மேற்கொள்ளப்படும் எண்ணெயின் சகல கடல் போக்குவரத்தையும், எண்ணெய் ஏற்றிஇறக்குதல் செயற்பாடுகளையும் கட்டுப் படுத்தல்.

(ஈ) ஏதேனும் அசையக்கூடிய அல்லது அசையாத ஆதனத்தைக் கையகப்படுத்தல், வைத்திருத்தல், எடுத்தல் அல்லது குத்தகைக்கு அல்லது கேள்வுக்கு வழங்குதல், அடமானம் செய்தல், வாக்களித்தல், விற்றல் அல்லது வேறு முறையில் விற்றொழித்தல்;

(உ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியப் பட்டவாறு அத்தகைய அலுவலர்களையும், சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்தல்;

(ஊ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவாறு உள்ள சகல அத்தகைய ஒப்பந்தங்களை ஏதேனும் அலுவலரினால் அல்லது அதன் சார்பாக

அங்கீகரிக்கப்பட்ட முகவரினால் நேரடியாக பதிவுசெய்தலும், நிறைவேற்றுதலும்;
(எ) சட்டத்தின் கீழ் அதிகார சபை மீது சுமத்தப்பட்டுள்ள சகல அல்லது ஏதேனும் அதிகாரங்களைச் சுமத்தும் நோக்கத்திற்காக பெயரினால் அல்லது பதவியினால் ஏதேனும் நபரை நியமித்தல்;

(ஏ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் அல்லது நிதிசார் நிறுவனத்தில் கணக்குகளை ஆரம்பித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்;

(ஐ) அதிகார சபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமான அத்தகைய பணத்தின் தொகைகளை இரவல் பெறுதல்;

(ஒ) இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள மூலங்களிலிருந்து அசையக்கூடியதும், அசையாததுமான ஆதனங்களின் மானியங் களையும், நன்கொடைகளையும் மற்றும் சாசனங்களையும் ஏற்றுக்கொள்ளுதலும், பெறுதலும், அதிகார சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்து தலும்;

(ஓ) அதிகார சபையின் அலுவல்களின் முகாமைத்துவம் தொடர்பில் விதிகளைச் செய்தல்;

(ஔ) அதிகார சபையினால் வழங்கப்படும் ஏதேனும் சேவைகளுக்கு ஏதேனும் நபரிடமிருந்து அல்லது நபர்களின் உறுப்பிலிருந்து கட்டணங்களைச் சுமத்துதல்;

(க) அதிகார சபையினால் வழங்கப்படும் சேவைகளுக்காக இலங்கையின் துறை முகங்களில் வந்திறங்கும் சகல கப்பல்கள் தொடர்பில் கட்டணங்களை அல்லது செலவு களை அறவிடுதல்;

(கா) அதிகார சபையின் பணிகளை அல்லது இச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களுக்கு இடைநேருகின்ற அல்லது அதிகார சபை மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது குறித்தொதுக்கப்பட்டுள்ள அல்லது அதிகார சபைக்கு தோதாக நிறைவேற்று வதற்கு அவசியமான சகல அத்தகைய வேறு செயற்பாடுகளை அல்லது விடயங்களைச் செய்தல்.

# 2. நிருவாக அறிக்கை

2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்பு சட்டத்தின் நோக்கங்களை குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட 2016-2020 கூட்டாண்மைத் திட்டத்தினதும் மற்றும் வருடாந்த செயல் திட்டத்தினதும் அமுலாக்கத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் நோக்கங்களைச் சாதிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாட்டிலான செயற்பாடுகளைப் பணிப்பாளர் சபை வழிகாட்டியதுடன், கண்காணிப்பையும் மேற்கொண்டது. நல்லாட்சி கோட்பாடுகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் பங்காளர்களுக்கு நீடித்து நிற்கும் நன்மைகள் கொண்டு வரப்பட முடியும் எனவும், அதிகார சபை சரிவர நிருவகிக்கப்பட முடியும் எனவும் பணிப்பாளர் சபை மேலும் நம்புகின்றது. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபை பத்து (10) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

கூட்டாண்மை ஆட்சியின் தத்துவங்கள் மீதான அடிப்படையில் நிருவாக அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர்களினால் வெளியிடப் பட்ட நல்லாட்சிக்கான வழிகாட்டலின் பிரகாரமும், திறைசேரியினாலும் மற்றும் வேறு சம்பந்தப்பட்ட அதிகார சபைகளினாலும் வழங்கப்பட்ட வேறு நிருவாக வழிகாட்டல்களின் கோட்பாடு களினதும், தேவைப்பாடுகளினதும் பிரகார மும் மதிப்புரையின் கீழுள்ள ஆண்டுக்கான செயற்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொறுப்பானதும், ஒளிவுமறைவற்றதுமான தன்மையொன்றைப் பின்பற்றி கூட்டாண்மை ஆட்சியின் கோட்பாடுகளை உறுதிப்படுத்து வதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளை மேம்படுத்துவதை நோக்கி நாளாந்தம் பணிப்பாளர் சபையின் கவனம் நோக்கினைக் கொண்டிருந்தது. பணிப்பாளர் சபையையும், கணக்காய்வு மற்றும் அதன் உபகுழுவான முகாமைத்துவ குழு வினையும், மற்றும் தகைமைவாய்ந்த சிரேஷ்ட முகாமைத்துவக் குழாமையும் உள்ளகக் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு கொண்டுள்ளது. மீளமைப்பு நடைமுறை களினதும், முறைமையியல்களினதும் ஊடாக உள்ளகக் கட்டுப்பாட்டு அலகுகள் பயனுறுதிவாய்ந்ததாக பயன்படுத்தும் தன்மையை பின்வரும் நிருவாகக் கட்டமைப்பு காட்டுகின்றது:

## 2.1 பணிப்பாளர் சபையின் பொறுப்பும், வகிபங்கும்

கடல்சார் சூழல் பாதுகாப்புச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களைச் சாதிக்கும் நோக்கத்திற்காக கொள்கையை வகுப்பதிலும், மதிப்பாய்வதிலும் அது கொண்டுள்ள ஆற்றலளவுகளையும், தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தையும் பயன்படுத்துவது பணிப்பாளர் சபையின் பிரதான பொறுப்புக்களில் ஒன்றாகும். நீண்ட கால நோக்கங்களைச் சாதிப்பதற்காக மூலோபாயங்களை அமுல்படுத்துவதே பணிப்பாளர் சபையின் வகிபங்காகும். இப்பணிகளை நிறைவேற்றுவதில் அவசியமான போது துறையில் உள்ள நிபுணர்களிடமிருந்து தொழில்நுட்ப மற்றும் உசாவுகை சேவைகளை பெற வேண்டியிருந்தது.

2016-2020 ஆண்டின் போது, இணைந்த திட்டம், செயல் திட்டம் மற்றும் வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு ஆகிய வற்றினால் எதிர்பார்க்கப்படும் இலக்குகளைச் சாதிப்பதற்காக நல்லாட்சிக் கோட்பாடு களைச் செயற்படுத்துவது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.

முகாமைத்துவ மற்றும் தொழிற்பாட்டுச் செயற்பாடுகளின் பயனுறுதிவாய்ந்ததும், செயற்றிறனானதுமான செயல்நிறை வேற்றத்தை உறுதிப்படுத்துவதற்காக நுண்ணாய்வையும், கண்காணித்தலையும் சுதந்திரமாக நிறைவேற்றுவதற்காக உப குழுவொன்றாக கணக்காய்வு, முகாமைத்து வக் குழுவைப் பணிப்பாளர் சபை நியமித்துள்ளது. இக் குழு பிரதானமாக நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர் களைக் கொண்டுள்ளது. கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் பொறுப்புக் களையும், வகிபங்குகளையும் இந்த அறிக்கை கொண்டுள்ளது.

## 2.2 பணிப்பாளர் சபையின் அடக்கம்

31.12.2017இல் உள்ளவாறு 10 உறுப்பினர் களைப் பணிப்பாளர் சபை கொண்டிருந்தது. அவர்களில் எட்டுப் பேர் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களாக உள்ள அதேவேளை தலைவரும், பொது முகாமையாளரும் நிறைவேற்றுப் பணிப்பாளர்களாகப் பணியாற்றுகின்றனர்.




உருபு 01

தலைவராக ரியர் அட்மிரல் (இளைப்பாறிய) ரொஹான் பெரேரா 05.01.2016 முதல் பணியாற்றினார். அவர் பணிப்பாளர் சபையின் அலுவல்களைத் தோதாக நடத்துவதற்கும், தடங்கலற்ற செயற்பாட்டு க்கும் வசதிகளையும், வழிகாட்டல்களையும் வழங்கினார்.

2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுத் தரத்திலானதும், நிறைவேற்று தரம் சாராததுமான அடக்கம் வைக்கப் பட்டிருந்தது. பணிப்பாளர் சபையில் சேவையாற்றும் நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களில் ஆறு பேர் நான்கு முக்கிய அமைச்சுக்களையும், கடற்படைத் தளபதியையும் மற்றும் வணிக கப்பற்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத் தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். இதனால் அதிகார சபையின் விரிவெல்லைக்கு தொடர்பான சகல விடயத் துறைகளை உள்ளடக்குவதற்காக பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்கள் அந்த நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பைக் கொண்டு வருவதில் பாரிய வகிபங்கொன்றை நிறைவேற்றுகின்றனர்.

## 2.3 பணிப்பாளர் சபையின் நியமனங்களும், இளைப்பாறுதல்களும்

நிதிசார் ஆண்டின் போது, அதாவது மதிப்பாய்வின் கீழுள்ள ஆண்டில் நிதி அமைச்சினால் நியமிக்கப்பட்ட சபையானது சபைக்கு எஸ்.எம்.ஐ.ரோஸாவை நியமித்த துடன், கடற்படை தளபதியின் பிரதிநிதியான கொமடோர் ஜினதாச கொமடோர் டயஸினால் பதிலீடு செய்யப்பட்டார். நியமிக்கும் அதிகார சபையின் தேவைப்பாடு மீது இந்த நியமனம் செய்யப்பட்டது. இந்த நியமனமானது சபையின் நடவடிக்கைகளை பாதிக்கவில்லை.

## 2.4 பணிப்பாளர் சபையின் கூட்டங்கள்

2017ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் 13 கூட்டங்கள் நடத்தப்பட்டன. பயனுறுதிவாய்ந்ததும், செயற்றிறனானது மான தீர்மானங்களை எடுப்பதற்கு அவசியமான சபை அறிக்கை களையும், மற்றும் வேறு தகவல்களையும் நேரகாலத்திற்கு பணிப்பாளர் சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப் ட்டன.

## 2.5 பணிப்பாளர் சபையின் செயலாளர்

பணிப்பாளர் சபையின் செயலாளராக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் முகாமையாளர் (சட்டம்) பணியாற்றுகின்றார். பணிப்பாளர் சபையின் பதிவேடுகளை வைத்திருப்பதற்கு மேலதிகமாக, நல்லாட்சியின் கோட்பாடு களையும், சட்டத் தேவைப்பாடுகளையும் செம்மையாகப் பின்பற்றி நேர காலத்திற்கு அவசியமான தகவலைப் பணிப்பாளர் சபைக்கு பணிப்பாளர் சபையின் செயலாளர் வழங்கினார்.

## 2.6 2017இல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் மீதான பதிவுகள்

| | பெயர் | பணிப்பாளர் சபையினால் தக்கவைக்கப்பட்ட பதவிநிலை | சபையின் கூட்டங்களின் எண். |
|---|---|---|---|
| 01 | திரு.ரியர் அட்மிரல் (இளைப்பாறிய) ரோஹண பெரேரா | தலைவர் (அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) - நிறைவேற்றுப் பணிப்பாளர் | 13/13 |
| 02 | திரு.பி.பீ.ரேனி பிரதீப் குமார் | பொது முகாமையாளர் நிறைவேற்றுப் பணிப்பாளர் | 13/13 |
| 03 | திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 07/13 |
| 04 | திரு.எ.டபிள்யு.செனவிரத்ன | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 06/13 |
| 05 | திரு.என்.எல்.எம்.பீ.லியனகே | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 09/13 |
| 06 | திரு.ஜி.மகேந்திர பெரேரா | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் (அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்) | 12/13 |
| 07 | திரு.போஷித பெரேரா | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 12/13 |
| 08 | திருமதி சேபாலிக விக்ரமசிங்க | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 06/13 |
| 09 | திரு.எ.கே.எம்.ஜினதாச | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 09/13 |
| 10 | திருமதி அனோமா நந்தனி | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 04/13 |
| 11 | கொமொடோர் பி.டி.எஸ்.டயஸ் (கொமொடோர் எ.கே.எம். ஜினதாச சார்பாக) | நிறைவேற்றதிகாரம் சாராத பணிப்பாளர் | 04/13 |

# 3. கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

மூன்று நிறைவேற்றுத் தரம் சாராத பணிப்பாளர்களைக் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு கொண்டுள்ளது. திறைசேரியின் பிரதிநிதி திருமதி அனோமா நந்தனி அதன் தலைவராக விளங்கியதுடன், சூழல் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.ஆர்.ஆர்.எ.ஆர். ரூபசிங்க மற்றும் பணிப்பாளர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரான திரு. என்.எல்.எம்.பீ.லியனகே குழுவின் உறுப்பினர்களாக விளங்கினார்கள். மேலதிகமாக, சூழல் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள கணக்காய்வு மேலாளரும், சூழல் அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய் வாளரும் பிரதான அவதானிப்பாளர்களாக கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களில் பங்கெடுத்தனர். கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவினால் வரவழைக்கப் பட்ட போது தெளிவுபடுத்தலை வழங்கு வதற்காக அவசியப்பட்ட போதெல்லாம் குழுவின் முன் பொது முகாமையாளரும், கணக்காளரும் அத்துடன் வேறு சம்பந்தப்பட்ட பதவிநிலைகளிலான அலுவலர்களும் ஆஜராகினர்.

உள்ளக கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொழிற்பாடு, நிதி, நிருவாக மற்றும் சட்ட பிரிவுகளை உள்ளடக்கி ஆண்டினுள் அமுல்படுத்தப் படுவதற்கு கணக்காய்வின் நோக்கெல்லை யில் உள்ள தொழிற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. மேலதிகமாக, நிதிசார் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதில் மதிப்பாய்வுக்கான உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள தொழிற்பாடுகளையும், நிருவாகத்தையும், நிதியையும் அத்துடன் குறைபாடுகளையும் பொறுத்தளவில் நடைமுறையிலான குறைபாடுகளைக் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களம் உட்படுத்தியிருந்தது.

முகாமைத்துவத்துடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையை கலந்துரையாடு வதன் மூலம் அவசியமான சீராக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கைகள் பின்பற்றப் பட்டன. அதிகார சபையின் உள்ளகச் சுற்று நிருபங்கள், நிதிசார் ஒழுங்குவிதிகள், தாபன சட்டக்கோவை மற்றும் வேறு ஒழுங்குவிதிகள் ஆகியவற்றின் பிரகாரம் அதிகார சபையின் அலுவல்கள் நடத்தப்படுகின்றன என்ற உறுதிப்பாட்டைப் பெறுவதற்காக கணக்காய்வு திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், அதிகார சபையின் சொத்துக்களைப் பேணுதல் அத்துடன் பராமரித்தல் மற்றும் அதிகார சபையின் திரவநிலையைப் பராமரித்தல் ஆகியன உட்பட சகல நிதி, நிருவாக மற்றும் தொழிற்பாட்டு செயற்பாடுகள் இம் முயற்சியில் கணக்காய்வுக்கு உட்படுத்தப் பட்டன. கணக்காளரினால் தயாரிக்கப்பட்ட நிதிசார் முன்னேற்ற அறிக்கைகளை கணக்காய்வு, முகாமைத்துவக் குழு பரிசோதித்ததுடன், இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கை தொடர்பில் தலைவருக்கும், பொது முகாமை யாளருக்கும் பரிந்துரைகளை சமர்ப்பித்தது.

அதன் கூட்டத்தில் தமது அவதானிப்பு களையும், முடிவுகளையும் மற்றும் பரிந்துரைகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் திணைக்களத்துடன் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு கலந்துரையாடியது. மேலதிகமாக, உள்ளக கணக்காய்வு அறிக்கைகளில் வெளிப் படுத்தப்பட்ட உண்மைகளையும், மற்றும் கணக்காய்வு முறைமையியல்களின் செயற்றிறனையும் கணக்காய்வு, முகாமை த்துவக் குழு மதிப்பாய்ந்ததுடன், குறைபாடு களை குறைந்தபட்சமாக்குவதற்கு அவசிய மான அறிவுறுத்தல்களையும், வழிகாட்டல் களையும் வழங்கியது. ஆண்டின் போது நான்கு தடவைகள் கூட்டத்தைக் கணக்காய்வு, முகாமைத்துவக் குழு நடத்தியது.

## 2017இல் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் மீதான பதிவுகள்

| | பெயர் | பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதவிநிலை | கணக்காய்வு, முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களின் எண். |
|---|---|---|---|
| 01 | திருமதி அனோமா நந்தனி | தலைவர் | 02/04 |
| | திரு.எஸ்.ஜ.எம்.ரோஸா | தலைவர் | 02/04 |
| 02 | திரு.என்.எல்.எம்.பீ.லியனகே | உறுப்பினர் | 01/04 |
| 03 | திரு.ஆர்.எ.ஆர்.ஆர்.ரூபசிங்க | உறுப்பினர் | 03/04 |
| 04 | திரு.எல்.டி.என்.குமாரசிறி | அவதானிப்பாளர் (மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு – பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்) | 02/04 |
| 05 | திரு.கே.கே.எஸ்.ஜயக்கொடி | அவதானிப்பாளர் - கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம் (கணக்காய்வு அத்தியட்சகர்) | 04/04 |
| 06 | திருமதி இ.டி.குமுது | அவதானிப்பாளர் (மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு – பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்) | 01/04 |

# 4. தொழிற்பாட்டிலான செயற்பாடுகளின் மதிப்பாய்வு

## 1. கடல்சார் சூழல் கட்டுப்பாட்டு முறைமையியல்களை மேம்படுத்தல்

### 1.1 கடல் நீர் தரத்தைச் சோதிக்கும் செயற்றிட்டம்

கரையோர மாவட்டங்களில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் தாபிக்கப்பட்ட பிராந்திய அலுவலகங்கள் தெரிவுசெய்யப்பட்ட சமுத்திர குளிக்கும் இடங்களில் நீரின் தரத்தைக் கண்காணிக்கும் செயற்றிட்டத்தை மேற்கொள்கின்றது. பௌதீக, இரசாயன மற்றும் உயிரக அளவீடுகள் மீதான அடிப்படையில் தீழ்ப்புக்களின் தரத்தையும் அளவையும் அடையாளங்காண்பதற்கு நீர் மாதிரிகள் சோதிக்கப்படுகின்றன. இங்கு பௌதீக அளவீடுகளாக வெப்பநிலை, கலங்கற்றன்மை மற்றும் கடத்துதிறன் ஆகியன சோதிக்கப்படு கின்றன. அதேவேளை அமிலத்தன்மை/ நச்சுத்தன்மை, நைத்திரேற் அத்துடன் பொஸ்பேற் அடக்கம் ஆகியன இரசாயன அளவீடுகளாக விளங்குகின்றன. கரைந்த ஒட்சிசன், உயிரக ஒட்சிசன் கிராக்கி, உயிரக இரசாயன கிராக்கி மற்றும் மொத்த கோலிபோர்ம் பக்டீரியா, மல விடயத்தில் கோலிபோர்ம் பக்டீரியா (மல கோலிபோர்ம்) ஆகியனவற்றின் அளவு போன்ற பௌதீக இரசாயனங்கள் நீர் மாதிரிகளைப் பயன்படுத்தி மாதாந்தம் கணக்கிடப்படுகின்றன.

அட்டவணை 1: நீரின் தரம் சோதிக்கப்பட்ட குளிக்கும் இடங்கள்

| பிராந்திய அலுவலகம் | சோதிக்கப்பட்ட கடல் குளிக்கும் இடங்கள் |
|---|---|
| கொழும்பு | கல்கிசை, வெள்ளவத்தை |
| நீர்கொழும்பு | நீர்கொழும்பு கடற்கரை பூங்கா |
| சிலாபம் | சிலாபம் கடற்கரை பூங்கா, வென்னப்புவ |
| திருகோணமலை | மார்பிள் கடற்கரை, புறா தீவு, நிலாவெளி கடற்கரை, திருகோணமலை |
| அம்பாறை | அறுகம்பே |
| ஹம்பாந்தோட்டை | பிஜன் கோஸ்ற் |
| மாத்தறை | மிரிஸ்ஸ |
| காலி | உணவட்டுன |
| களுத்துறை | மொறகல்ல |
| யாழ்ப்பாணம் | சாட்டி, கசூரீனா, தொண்டைமனாறு |
| மன்னார் | தலைமன்னார், பேசாலை, கீரி |
| மட்டக்களப்பு | பாசிக்குடா |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சாராமாறிகளுக்கு நீர் மாதிரிகளைச் சோதிப்பது குறுகிய கால நீரின் தரத்தின் மாற்றங்களை ஆய்வதில் மிகவும் முக்கியமான அதேவேளை, மல விடயத்தினால் நீரின் தீழ்ப்பினை அளவிடுவதற்கான பிரதான சாராமாறிகளான மொத்த கோலிபோர்ம், மல கோலிபோர்ம் மற்றும் E.கோலிபோர்ம் கணக்கெடுப்பு ஆகியவற்றுக்கு சோதிப்பதும் முக்கியமானதாகும். ஏனெனில் பக்டீரியாவை விளைவிக்கும் நோயின் பிரசன்னத்திற்கான சாத்தியக்கூற்றினைக் காட்டுவதற்கான தெளிவான காட்டியொன்றாக இது விளங்குகின்றது. இந்த நீரின் தர சோதனைகளிலிருந்து பெறப்பட்ட தரவுகள் குளிக்கும் இடங்களை மேம்படுத்து வதற்கும் அத்துடன் மக்களின் விழிப்பியலை உயர்த்துவதற்கும் முக்கியமாக உள்ள அதேவேளை, சமுத்திர குளிக்கும் இடங்கள் இந்த சோதனைகளின் முடிவுகளின் பிரகாரம் மதிப்பிடப்படுகின்றன.

அட்டவணை 2: குளிக்கும் இடங்களின் நீரின் தரக் காட்டி

| தரம் | காட்டி | வகுப்பு |
|---|---|---|
| மிக மோசம் | <45 | VI |
| மோசம் | 46 - 60 | V |
| சராசரி | 61 - 69 | IV |
| நன்று | 70 - 79 | III |
| மிக நன்று | 80 - 90 | II |
| சிறப்பு | 91 - 100 | I |

அட்டவணை 3: இலங்கையில் கடல்சார் குளிக்கும் இடங்களின் வகைப்படுத்தல்

| மாவட்டம் | காட்டியின் பெறுமதி | தரம் | வகுப்பு |
|---|---|---|---|
| களுத்துறை | 100 | சிறப்பு | I |
| காலி | 70 | சிறப்பு | III |
| மாத்தறை | 100 | சிறப்பு | I |
| ஹம்பாந்தோட்டை | 90 | மிக நன்று | II |
| அம்பாறை | 100 | சிறப்பு | I |
| மட்டக்களப்பு | 100 | சிறப்பு | I |
| புத்தளம் | 70 | நன்று | III |
| கம்பஹா | 66.9 | சராசரி | IV |
| கொழும்பு | 59.96 | மோசம் | IV |
| திருகோணமலை | 100 | சிறப்பு | I |
| யாழ்ப்பாணம் | 100 | சிறப்பு | I |
| மன்னார் | 100 | சிறப்பு | I |

மேலே குறிப்பிடப்பட்ட ஆய்வுகளின் முடிவுகள் மீதான அடிப்படையில், நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கு கடல்சார் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்காக பலதரப்பட்ட செயற்றிட்டங்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை நடத்தியுள்ளது. மீன்பிடித்தொழில் கைத்தொழிலுடன் இணைந்துள்ள தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கான தேசிய கொள்கை களையும், உபாயங்களையும் மற்றும் செயல் திட்டத்தையும் தயாரிப்பது, கரையோரச் சூழல் புறவரையை தயாரிப்பது, கரையோர முகாமைத்துவக் குழுக்களை அமைப்பது, முருகை கற்பார்த்தொடர் புனரமைப்பு செயற்றிட்டங்களை அமுலாக்குவது அத்துடன் கரையோர வலயத்தில் கழிவுத் தொட்டிகளை இடுவது, கடலில் கழிவை ஒழிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல், கப்பல்களிலிருந்து எரிபொருள் இறைக்கப்படும் போது இடம்பெறுகின்ற தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் அத்துடன் கழிவு கொட்டப்படும் இடங்களையும் மற்றும் கடலினுள் வருகின்ற நீர் மார்க்கங்களையும் கண்காணித்தல் ஆகியன ஒருசில அத்தகைய செயல் திட்டங்களாகும்.

## 1.2 மீன்பிடித்தல் கைத்தொழிலில் இடம்பெறும் தீழப்பினைத் தணித்தல்

மீன்பிடித்தொழில் கைத்தொழிலுடன் இணைந்துள்ள தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கு தேசியக் கொள்கைகளையும், உபாயங்களையும் மற்றும் செயல் திட்டங்களையும் தயாரித்தல்.

மீன்பிடித்தொழில் கைத்தொழிலுடன் இணைந்துள்ள தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதற்கு தேசியக் கொள்கைகளையும், உபாயங்களையும் மற்றும் செயல் திட்டங்களையும் தயாரித்தல் மீதான இறுதி அறிக்கை மற்றும் அதற்கு மந்திரிகளின் அமைச்சரவையின் அங்கீகாரத்தை நாடுகின்ற அமைச்சரவைப் பத்திரம் ஆகியன தயாரிக்கப்பட்டு மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சுக்கு மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது.

## 1.3 எரிபொருள் நிரப்புதலுக்கு உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் 2017

2007ஆம் ஆண்டுக்கு எரிபொருள் நிரப்புவதற்காக 10 கப்பல்களுக்கு உத்தரவுப்பத்திரங்கள் பெறப்பட்டுள்ள அதேவேளை, ராங்கர் ட்ரக்குகளை (பௌசர்கள்) பயன்படுத்தி எரிபொருள் நிரப்புதல் செயற்பாடுகளுக்கு 03 நிறுவனங்கள் உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுள்ளன. மேலும் கப்பல்களினால் எண்ணெய் விநியோகஸ்தர் ஒன்றாகவும் மற்றும் எரிபொருள் நிரப்புதலுக்காக பதிவுசெய்யப்பட்ட எண்ணெய் தாங்கிகளாகவும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி பதிவுசெய்துள்ளது.

**எரிபொருள் நிரப்புதல் தொழிற்பாடுகளுக்கு பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் – 2017 (கம்பெனிகள் மற்றும் கப்பல்கள்)**

| | பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் | விலாசம் | பதிவு இல. | கப்பலின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | மோசெட்டி இன்ரர்நஷனல் (பிறை.) லிமிற். | ரேர்பன் விங், இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 | 2017/BUN/01 | MT LMS LAXAPANA |
| 2 | லங்கா மரைன் சேர்விசஸ் லிமிற். | ரேர்பன் விங், இல.400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 | 2017/BUN/02 | MT LMS DUNHINDA |
| 3 | லங்கா பங்கரிங் சேர்விசஸ் (பிறை.). லிமிற். | இல.46/5, றொபேர்ட் சேனநாயக்க கட்டிடம், நவம் மாவத்தை, கொழும்பு 2 | 2017/BUN/03 | MT SEAFALCON |
| 4 | லங்கா மரைன் சேர்விசஸ் (பிறை.) லிமிற். | இல. 04, லேடன் பஸ்ரியான் வீதி, கொழும்பு 01 | 2017/BUN/04 | MT MADURU OYA |
| | | | 2017/BUN/05 | MT LM NILWALA |
| | | | 2017/BUN/11 | LM MAHAWELI |
| 5 | இன்ரர்ஒசன் எனர்ஜி (பிறை.) லிமிற். | இல.284, வக்ஷோல் வீதி, கொழும்பு 02 | 2017/BUN/06 | MT KANDY |
| | | | 2017/BUN/07 | MT OCEAN GALLE |
| | | | 2017/BUN/08 | MT OCEAN TRINCO |
| | | | 2017/BUN/09 | MT SHERMAC |
| 6 | லங்கா IOC PLC | மட்டம் 20, மேற்கு கோபுரம், உலக வர்த்தக மையம், எச்செலன் சதுக்கம், கொழும்பு 01 | 2017/BUN/10 | MT KANDY<br>MT SHERMAC<br>MT OCEAN GALLE<br>MT OCEAN TRINCO |

**பாரவண்டிகள் (பவுசர்கள்) ஊடாக எரிபொருள் நிரப்புதலுக்கு பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள்**

| | பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் | விலாசம் | க.சூ.பா.அ.ச. பதிவு இலக்கம் | வாகன பதிவு இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | ஜயசுந்தர மோட்டர்ஸ் | இல. 222, கந்தலந்த, ஹோமாகம | 2017/BUN-RT/01 | 28-0679 LC 3087<br>41-7366 LJ- 0532<br>LG-0759 47-0632<br>LK-5865 LJ - 7069<br>43-2464 |
| 2 | கப்பிட்டல் ட்ரான்ஸ்போட் அன்ட் ரேடிங் கம்பனி (பிறை.) லிமிற். | இல. 60/A, அவிசாவளை வீதி, ஹேவாகம, கடுவெல | 2017/BUN-RT/02 | LY-2068 LX-2799<br>LY-1845 LX-2810<br>LY-1713 GD-4291<br>LY-1710 GD-3364 |
| 3 | நேவில் என்ரர்பிறைசஸ் | இல.279/7, வெக்க வத்தை வீதி, வெயிக்கியாவத்தை வீதி, கொறத்தோட்ட, கடுவெல | 2017/BUN/RT-03 | LJ-1069 LK-1721<br>LK-3133 LK-5738<br>LK-6443 LK-6945<br>LL-0816 LL-0919<br>LL-4710 |

**எரிபொருள் நிரப்புதல் செயற்பாடுகளுக்கு பதிவுசெய்யப்பட்ட கப்பல்கள் மற்றும் பண்ணைகள்** – லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, திருகோணமலை

ஆண்டின் போது எரிபொருள் நிரப்புதல் செயற்பாடுகளுக்காக பதிவுசெய்யப்பட்ட நிறுவனங் களிலிருந்து பெறப்பட்ட வருமானம் – ரூபா 1,807,000.00

### 1.4 கடல்சார் சூழலைப் பாதுகாப்பது தொடர்பில் கொட்டுதல் அனுமதிச் சீட்டுக்களை வழங்குதல்

கடல்சார் சூழலில் பிரதான கைத்தொழிலாக மீன்பிடித்தொழில் விளங்குவதுடன், இது சுற்றுலாத்துறையுடனும் மற்றும் ஆரோக்கியத் துடனும் இணைப்பினைக் கொண்டுள்ளது. காணியின் 90%ஐக் கொண்ட கடல்சார் சூழல் தீழ்ப்புக்கு தீங்கினை விளைவிக்கின்ற அதே வேளை கடலுக்கு 10% தீழ்ப்பினை விளைவிக்கின்றது. எனவே, கடல்சார் தீழ்ப்பின் மூலங்களை அடையாளங்காண்பதற்கும் அத்துடன் அவற்றினால் விளைவிக்கப்படுகின்ற தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குவதும் கடல்சார் தீழ்ப்பினைக் குறைப்பதற்கும், தடுப்பதற்கும் அத்துடன் கட்டுப்படுத்துவதற்கும் முக்கியமானது என்பதனால் நடவடிக்கை எடுப்பது அவசியமானதாகும். இது அமைப்புக்களிலும் இடம்பெறுகின்ற கடல்சார் தீழ்ப்பினைக் குறைப்பதற்கும், தடுப்பதற்கும் அத்துடன் கட்டுப்படுத்துவதற்கும் பணியாற்றுகின்ற ஒழுங்குபடுத்தல் நிறுவனமாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை விளங்குகின்றது.

எனினும், காணி மீது இடம்பெறுகின்ற தீழ்ப்புடன் ஐந்து ஒழுங்குவிதிகளில் ஒன்று மட்டுமே இணைந்துள்ளது. அது கடல்சார் தீழ்ப்பு தடுப்பு (கடலில் கொட்டுதல்) ஒழுங்குவிதி இல.01 2013 ஆகும். கடல்சார் சூழலுக்கு திரவ மற்றும் திண்மக் கழிவை விடுவிக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவதே ஒழுங்குவிதியின் அடிப்படை நோக்கமாகும். கரையோர வலயத்திற்கு நீரை விடுவிக்கும் போது, அதை சுத்திகரித்த பின்னர் மட்டுமே விடுவிக்கப்பட வேண்டுமென்பதை இந்த ஒழுங்குவிதி வேண்டுவதுடன், அவ்வாறு பரிகரிக்கப்பட்ட கழிவினை விடுவிப்பதைக் குறைந்தபட்சமாக்குவதற்கும் ஊக்கமளிக்கப்படு கின்றது.

#### 1.4.1 உத்தரவுப்பத்திரமிடல் மற்றும் வருமானங்கள்

31.12.2017இல் உள்ளவாறு, கடலில் கொட்டப் படுவதற்கான உத்தரவுப்பத்திரங்களின் சாராம்சம்:

| விவரணம் | எண்ணிக்கை |
|---|---|
| 2017ஆம் ஆண்டுக்கு வழங்கப் பட்ட உத்தரவுப்பத்திரங்கள் | 177 |
| 31.12.2017இல் உள்ளவாறு வழங்கப்பட்ட உத்தரவுப் பத்திரங்கள் | 152 |

2016இனதும், 2017இனதும் ஒப்பீடு

| ஆண்டு | உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை | வருமானம் |
|---|---|---|
| 2016 | 95 | 2,908,232.88 |
| 2017 | 177 | 3,795,767.12 |
| முன்னேற்றம் | 86.3% | 30.51% |

## 2. கடல்சார் தீழப்பிணைத் தணிப்பதன் முறைமையியல்களை மேம்படுத்தல்

### 2.1. கரையோர சூழல் புறவரையைத் தயாரித்தல்

கரையோர சூழலில் தீழ்ப்பின் சகல வளங்களையும் மற்றும் மூலங்களையும் இச் செயற்றிட்டம் திட்டமிடுவதுடன் அளவீடும் செய்கின்றது.

### 2.2 குளிக்கும் இடங்களை கண்காணித்தல் மற்றும் மற்றும் மேம்படுத்தல்

குளித்தல், நீச்சலடித்தல், நீர்மூழ்குதல், நீரடிநீச்சல், கப்பல் மூலம் இடங்களைப் பார்வையிடுதல் போன்ற சுற்றுலாப்பயணிகளைக் கவர்கின்ற செயற்பாடுகள் உள்ள கடல் குளிக்கும் இடங்களைக் கண்காணிப்பதற்கும் அத்துடன் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனுடன் இணைந்துள்ள செயற்பாடுகள் ஊடாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க நன்மைகள் ஏற்படுகின்றன. பௌதீக (வெப்பநிலை, சகதிநிலை, மொத்த தொங்கற் திண்மங்கள்), இரசாயன ($P^H$ கடத்துதிறன், உவர்தன்மை, கரைந்த ஒட்சிசன், உயிரியல் ஒட்சிசன் கிராக்கி, இரசாயன ஒட்சிசன் கிராக்கி, எண்ணெய் மற்றும் கொழுப்பு) மற்றும் நுண்ணுயிரியல் (மொத்த கோலிபோர்ம், மல கோலிபோர்ம்) ஆகியனவே இது தொடர்பில் கரிசனைக்கு எடுக்கப்படவுள்ள சாராமாறிகளாகும்.

அந்தப் பகுதிகளில் கடலில் ஒழிக்கப்படும் கழிவினால் விளைவிக்கப்படும் சூழல் தீழ்ப்பினைக் குறைப்பதற்கு, தொடர்பான முகாமைத்துவ முறைமைகளைத் திட்டமிடுவதும், அமுலாக்குவதுமே இச்செயற்றிட்டத்தின் நோக்க மாகும்.

### 2.3 கரையோர முகாமைத்துவ குழுக்களைத் தாபித்தல்

சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மட்டத்திற்கு இலங்கையின் கரையோர வலயங்களை விருத்திசெய்வதும் அத்துடன் தென்னாசியாவில் பிரசித்தமான சுற்றுலாத்துறை வலயங்களாக அவற்றைச் செய்வதுமே இச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும். களுத்துறை மாவட்டத்தில் உணவட்டுன கரையோர வலயத்திற்கும் அத்துடன் களுத்துறை மாவட்டத்திலுள்ள மொறகல்ல கரையோர வலயத்திற்கும் சர்வதேச "நீல கொடி" சான்றளிப்பினைப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கை இந்த குழுக்களிலிருந்து ஆதரவை பெறுவதிலிருந்து செயற்பாட்டிற்கு இடப்படும்.

### 2.4 இலங்கை கடல்சார் சூழலைப் பாதுகாத்தல்

### 2.5 வனரோப செயற்றிட்டம்

2018க்குள் 32%க்கு இலங்கையின் வனப் போர்வையை உயர்த்துவதற்கான இலக்கினைச் சாதிக்கும் நோக்கத்துடன், வனரோப தேசிய செயற்றிட்டம் நடவடிக்கையினுள் இடப்பட்டது. இந்த தேசிய செயற்றிட்டத்திற்கு பக்கம் பக்கமாக கொழும்பு பிராந்திய அலுவலகத்தினால் தாபிக்கப்பட்ட கடல்சார் தீழ்ப்புக் குழுக்கள் இடப்பரப்பினை கொண்டுள்ள பாடசாலைகளுக்கு நாற்றுக்கள் வழங்கப்பட்டன. இதன் பிரகாரம் சென்.அந்தனீஸ் மகளிர் கல்லூரி, தெஹிவளை யிலுள்ள பிறஸ்பெற்றேரியன் மகளிர் கல்லூரி மற்றும் டீ லசாலே கல்லூரி ஆகியவற்றுக்கு நாற்றுக்கள் விநியோகிக்கப்பட்டன.





*பிறஸ்பெற்றேரியன் மகளிர் கல்லூரி மற்றும் டீ லசாலே கல்லூரி ஆகியவற்றுக்கு நாற்றுக்களைப் பங்கிடுவது மீதான வைபவத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.*

### 2.6 கடற்கரை சுத்தப்படுத்தல் செயற்றிட்டம்



களனி பல்கலைக்கழகத்தினால் AIESESஇன் வேண்டுகோளின் பேரில் கடற்கரை சுத்திகரிப்புத் திட்டமொன்று நடத்தப்பட்டது.

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணி மீது விழிப்பியலை உயர்த்துதல், கடல்சார் சூழலின் முக்கியத்துவம் மற்றும் அழிந்துபோகாத கழிவினால் கடல்சார் சூழலுக்கு விளைவிக்கப் படுகின்ற சூழல்-சார் சேதத்தின் முக்கியத்துவம் அத்துடன் அதிகாரசபையின் வகிபங்கு பற்றி சர்வதேசச் சமூகத்திற்கு புரிந்துணர்வை வழங்குதல் ஆகியனவே இச் செயற்றிட்டத்தின் பிரதான நோக்கமாகும். 30 வெளிநாட்டுப் பல்கலைக்கழக மாணவர்களின் பங்கெடுப்புடன் வெள்ளவத்தை கரையோர வலயத்தில் செயற்றிட்டம் நடத்தப்பட்டது.





*கரையோர சுத்திகரித்தல் செயற்றிட்டத்தின் போது எடுக்கப்பட்ட ஒரு சில புகைப்படங்கள்*

### 2.7 கரையோர வலயத்தை சுத்திகிரித்தல் மற்றும் கழிவு தொட்டிகளை விநியோகித்தல்

கரையோர வலயத்தினுள் கழிவின் ஒழித்தலைக் குறைந்தபட்சமாக்குவதற்கு முறைமையியலிலான செயல் மார்க்கமொன்று அவசியமாகும். இதனால் கழிவின் தோதான ஒழித்தலை நோக்கி ஆரம்ப நடவடிக்கையொன்றாக இரத்மலானையில் வெடிகந்த பகுதியில் மக்களுக்கு 03 கழிவுத் தொட்டிகள் வழங்கப்பட்டன.



*கழிவு தொட்டிகளை நிறுவும் தருணத்தில் எடுக்கப்பட்ட ஒரு சில புகைப்படங்கள்*

## 3. கடல்சார் சூழல் தீழ்ப்பினதும், அதன் தாக்கங்களினதும் மீதான விழிப்பியலை உயர்த்துதல்

### 3.1 கடல்சார் சூழல் மீதான விழிப்பியலை உயர்த்துதல்

#### 3.1.1 சத் சமுத்ர என்ற பெயரிலான சஞ்சிகையை வெளியிடுதல்



2017 உலக சுகாதார தினத்தைக் குறிப்பதற்காக, 3,000 பிரதிகள் கொண்ட சத் சமுத்ர வருடாந்த சஞ்சிகை அச்சிடப்பட்டது. இந்த சஞ்சிகையின் பிரதிகள் பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலைச் சிறுவர்கள், அரசாங்க அலுவலர்கள் மற்றும் சனசமூகத்தினர் ஆகியோர் மத்தியில் பங்கிடப்பட்டதுடன், சமுத்திரம் மீதான அவர்களது விழிப்பியல் உயர்த்தப்பட்டது. இந்த நோக்கத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூபா 705,000.00 ஆகும்.

#### 3.1.2 சமுத்ர புவத் சஞ்சிகை

**சமுத்ர புவத் சஞ்சிகையை அச்சிடுதல்**

ஒவ்வொரு காலாண்டுக்கும் சமுத்ர புவத் ('சமுத்திர செய்தி' என நடைமுறையில் கருத்தினைக் கொண்ட) என்ற காலாண்டிலான சஞ்சிகையின் 8,000 பிரதிகள் வெளியிடப் பட்டதுடன், இது மொத்தமாக 24,000 பிரதிகளாகும். இதன் ஆகுசெலவு ரூபா 193,200 ஆகும்.

#### 3.1.3 பாடசாலை கடல்சார் குழுக்களை அறியச்செய்தல்

**(பாடசாலை கடல்சார் குழுக்களுக்கு விழிப்பியல்)**

மனித செயற்பாடுகளின் காரணமாக கடல்சார் சூழல் படிப்படியாக தீழ்ப்படைகின்றது. இது பற்றி விழிப்பியலை உயர்த்துவதற்கான நடவடிக்கை ஒன்றாக கரையோரப் பாடசாலைகளில் பாடசாலை கடல்சார் குழுக்கள் தாபிக்கப்பட்டன. கடல்சார் தீழ்ப்பினதும் மற்றும் தற்போது மேற்கொள்ளப்படும் தீழ்ப்பின் முக்கியத்துவத் பாடசாலைச் சிறுவர்களுக்கு அறியச் செய்வதும், அவ்வாறாக மாணவர்களின் சூழல்-நட்புறவிலான சந்ததியொன்றை உருவாக்குவதுமே இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இவ்வருடத்தில் 08 பாடசாலை கடல்சார் குழு விழிப்பியல் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன. கடல்சார் சூழல், தீழ்ப்பின் வழிவகைகளை ஆராய்தல் மற்றும் கடல்சார் தீழ்ப்பினைத் தடுத்தல் ஆகியன மீது இச் செயற்றிட்டங்களில் பாடசாலைச் சிறுவர்களுக்கு அறிவூட்டப்பட்டது.

அட்டவணை 03: விழிப்பியல் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்ட பாடசாலைகள்

| | பாடசாலைகளின் பெயர் |
|---|---|
| 01 | கொரலவெல்ல மஹா வித்தியாலய, மொரட்டுவ |
| 02 | சென்ற். அந்தனீஸ் மகளிர் கல்லூரி, முகத்துவாரம் |
| 03 | டி லஸல் கல்லூரி, முகத்துவாரம் |
| 04 | ஸ்ரீ மேதானந்த வித்தியாலய, முகத்துவாரம் |
| 05 | சென்ற். மேரிஸ் கல்லூரி, மட்டக்குளிய |
| 06 | பிறஸ்பெற்றேரியன் மகளிர் கல்லூரி, தெஹிவளை |
| 07 | உயன கனிஷ்ட வித்தியாலய, மொறட்டுவ |



*மொரட்டுவ உயன கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை கடல்சார் சூழல் குழுக்களுக்கான விழிப்பியல் செயற்றிட்டத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம்*

### 3.2 சர்வதேச தினத்தைக் குறிப்பதற்கு செயற்றிட்டங்களை ஒழுங்குபடுத்துதலும், நடத்துதலும்

#### 3.2.1 உலக சமுத்திர தினம்

கடல்சார் சூழலின் முக்கியத்துவம் குறித்து உலக சமூகத்தை ஒளியேற்றும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகளினால் நடத்தப்பட்ட றியோ டீ ஜனரியோ மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானம் ஒன்றின் பிரகாரம், 2009 முதல் ஒவ்வொரு வருடமும் ஜூன் 08 அன்று உலக சமுத்திரங்கள் தினம் கொண்டாடப்படுகின்றது. இதனால் முன்னைய வருடங்களைப் போன்று உலக சமூகத்துடன் ஒன்றுசேர உலக சமுத்திரங்கள் தினத்தை எமது அதிகாரசபை கொண்டாடியது. இதன் பிரகாரம், 2017 ஜூன் 07 அன்று உலக சமுத்திரங்கள் தினத்தைக் கொண்டாடுவதற்காக மக்களின் விழிப்பியல் செயற்றிட்டமொன்றை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை ஒழுங்குபடுத்தியது. செயற்றிட்டத்தில் பிரதம விருந்தினராக மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சுக்கான செயலாளர் திரு.உதய ஆர்.செனிவிரத்ன பங்கெடுத்தார்.



*நடத்தப்பட்ட வைபவத்திலிருந்து ஒரு தருணம்*

இந்த தடவை “எமது சமுத்திரமே எமது எதிர்காலம்” என்ற கருப்பொருளின் கீழ் விழிப்பியல் செயற்றிட்டம் ஒன்றாக விஹார மகா தேவி திறந்த வெளி அரங்கிலிருந்து காலி முகத்திற்கு பேரணியொன்று நடத்தப்பட்டது. இதில் இலங்கை பொலிஸ், இலங்கை கடற்படை, இலங்கை இராணுவம், இலங்கை துறைமுக அதிகாரசபை, மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு, இலங்கை மகாவலி அதிகார சபை, மத்திய சூழல் அதிகார சபை, அழிவு முகாமைத்துவ நிலையம், கரையோரப் பேணல், கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம், அணு சக்தி அதிகார சபை, மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் திணைக் களம், வனவாழ்வுப் பேணல் திணைக்களம், கொழும்பு டொக்யாட்ஸ், தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம் மற்றும் அரசாங்க சார்பற்ற தாபனங்கள் ஆகியவற்றின் அலுவலர்கள் பங்கெடுத்தனர். மேலதிகமாக, 1,600க்கு மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர் களும், பாடசாலைச் சிறுவர்களும் நிகழ்ச்சியில் பங்கெடுத்தனர்.



விழிப்பியலை உயர்த்தும் பேரணிக்குச் சமாந்தரமாக, வெள்ளவத்தை, மட்டக்குளிய மற்றும் காக்கைதீவு ஆகியவற்றிலுள்ள கரையோர வலயங்கள் மீது கரையோர சுத்திகரித்தல் செயற்றிட்டங்களும் நடத்தப்பட்டன.

அத்தகைய செயற்றிட்டங்கள் ஊடாக, கடல்சார் சூழலின் முக்கியத்துவத்தை இந்த மக்கள் நன்குணர்த்த முடியும் என்பதுடன், கடல்சார் சூழலைப் பாதுகாப்பதில் பிரஜைகளாக தீவிரமாகப் பங்கெடுப்பதற்கு அவர்களை இயலச்செய்யவும் முடியும்.

### 3.2.2 தேசிய கடல்சார் வளங்கள் பாதுகாப்பு வாரத்தையும், கரையயோரச் சுத்திகரித்தல் தினத்தையும் குறிப்பதற்கான வைபவம் 2017

கரையோர மற்றும் கடல்சார் சூழல் முறைமைகளையும் அத்துடன் அவற்றுடன் இணைந்துள்ள கைத்தொழில்களினதும் நிலைத்திருக்கும்தன்மையையும் பாதுகாப்பதில் சகல மக்களையும் உணரவைப்பதற்கும் அத்துடன் நடைமுறைரீதியில் சம்பந்தப்படுத்துவதற்கும் முறைமைரீதியிலான செயல் மார்க்கமொன்றை வகுத்தமைப்பது அத்தியாவசியமாக விளங்குகின்றது. இதனால் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் 'நீலம் - பச்சை கருத்துருவுக்கு' அமைவாக, "தேசிய கடல்சார் வளங்கள் பாதுகாப்பு வாரமாக" 2016ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு செப்ரெம்பர் மாதத்தின் முதலாவது வாரத்தை மந்திரிகளின் அமைச்சரவை பிரகடனப்படுத்திய அதேவேளை ஒவ்வொரு செப்ரெம்பர் மாதத்தின் மூன்றாவது சனிக்கிழமையன்று சர்வதேசக் கரையோரச் சுத்திகரித்தல் தினம் கொண்டாடப் பட்டது.

இதன் பிரகாரம், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் சகல 14 கரையோர மாவட்டங்களை உள்ளடக்கி செப்ரெம்பர் 15 முதல் 22 வரை ஒழுங்குபடுத்தப்பட்ட தேசிய கரையோரச் சுத்திகரித்தல் செயற்றிட்டம் அமுலாக்கப்பட்டது. இதன் பிரதான தேசிய செயற்றிட்டம் 2017 செப்ரெம்பர் 15 அன்று காலை 7.00 மணியிலிருந்து மட்டக்குளியில் காக்கை தீவு கரையோர வலயத்தில் நடத்தப்பட்டதுடன், இதில் மகாவலி அபிவிருத்தி, சூழல் பிரதி அமைச்சர் கௌரவ அனுராத ஜயரட்ன, மேல் மாகாண முதலமைச்சர் கௌரவ இசுர தேவப்பிரிய மற்றும் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் பங்கெடுத்தனர். இதில் அரசாங்க அலுவலர்களும், அரசாங்க சார்பற்ற தாபனங்களின் உறுப்பினர்களும், பாடசாலைச் சிறுவர்களும் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் பங்கெடுத்தனர்.

இதற்கு ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக, வாரம் முழுவதும் கடற்கரை சுத்திகரித்தல் செயல் திட்டம் அமுலாக்கப்பட்டதுடன், இதில் சகல 14 கரையோர மாவட்டங்களையும் உள்ளடக்கி 75 இடங்களில் 16,500 மக்கள் பங்கெடுத்தனர்.

| | மாவட்டம் | சுத்திகரிக்கப் பட்ட கரையோரத்தின் நீளம் (கி.மீ.) | பங்கெடுப் பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 15 | 2,675 |
| 02 | களுத்துறை | 12 | 850 |
| 03 | கம்பஹா | 15 | 1,210 |
| 04 | புத்தளம் | 16 | 950 |
| 05 | யாழ்ப்பாணம் | 14 | 850 |
| 06 | முல்லைத் தீவு | 10 | 500 |
| 07 | திருகோணமலை | 21.5 | 1,400 |
| 08 | மட்டக்களப்பு | 47 | 2,300 |
| 09 | அம்பாறை | 11 | 1,000 |
| 10 | காலி | 28 | 1,975 |
| 11 | மாத்தறை | 15 | 1,110 |
| 12 | ஹம்பாந்தோட்டை | 9 | 850 |
| 13 | மன்னார் | 16 | 800 |
| 14 | கிளிநொச்சி | 12 | 350 |

இவ்வருடம் இலங்கையில் முதற் தடவையாக திருகோணமலை மாவட்டத்தில் அலஸ் பார்க் மற்றும் புறாத்தீவு ஆகியவற்றில் கடலில் கீழடி நீரைச் சுத்திகரிப்பதற்காக இரு சுத்திகரித்தல் செயற்றிட்டங்களை நடத்துவது சாத்தியப்பட்டது. தேசிய கடல்சார் வளங்கள் பாதுகாப்பு வாரத்திற்கு சமாந்தரமாக டெங்குவைத் தணிப்பது மீது மக்களை உணரவைப்பதற்கான செயற்றிட்டங்கள் மாவட்டச் சுகாதார அலுவலர்களின் ஒத்துழைப்புடன் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்பட்டது.

இச் செயற்றிட்டங்களில் ஒன்றுதிரண்டிருந்த கழிவினை சரிவர ஒழிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டன. இதனால், மீள்-சுழற்சிப்படுத்தக் கூடிய கழிவை தொடர்பான இடங்களுக்கு அனுப்புவதற்கும் தொடர்பான உள்ளூராட்சி நிறுவனங்களின் உதவியுடன் மீள்-சுழற்சிப்படுத்த முடியாத பொருட்களை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.



*ஹம்பாந்தோட்டையில் கரையோர வலயத்தில் சுத்திகரித்தலின் தருணம்*





*காலி மாவட்டத்தில் நடைபெற்ற டெங்கு விழிப்பியல் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து ஒரு கண்ணோட்டம்*

கடல்சார் சூழலின் பாதுகாப்பினை நோக்கி மக்களின் கவனத்தை ஈர்த்தெடுப்பதும் அத்துடன் அவ்வாறாக கரையோரம் அசுத்தமடைவதை தடுப்பதுமே இச் செயற்றிட்டத்தை அமுலாக்கு வதன் பிரதான நோக்கமாகும்.

அவ்வாறு சேகரிக்கப்பட்ட கழிவின் அடக்கம் மீது பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதுடன், இலங்கையைச் சுற்றி கரையோர வலயத்தின் நெடுகிலும் ஒன்றுதிரண்டுள்ள கழிவு தொடர்பில் பெறுமதியான தரவுத் தளமொன்றை தாபிப்ப தற்கான தகுதி இச் செயற்றிட்டத்திலிருந்து ஈட்டப்பட்ட வெற்றிகரமான முடிவான்றாக விளங்கியது.

### 3.3 கடல்சார் சூழல் தீழ்ப்பு மீதான அறிவைப் பரிமாறுதல் மற்றும் விழிப்பியல் செயற்றிட்டம்

#### 3.3.1 மூன்றாவது தேசிய கடல்சார் சூழல் கருத்தாடல் - 2017

மூன்றாவது தேசிய கடல்சார் சூழல் கருத்தாடலை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை 2017 ஒக்ரோபர் 17 அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடத்தியதுடன், இதில் கடல்சார் சூழலுக்கு முன்வைக்கப்பட்டுள்ள உள்ளூர் மற்றும் உலகளாவியரீதியிலான அச்சுறுத்தல்கள் மீதும் அத்துடன் அதன் பாதுகாப்புக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்தாய் வொன்றை உருவாக்கும் நோக்கமொன்றுடன் விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் சட்ட வாளர்களும் மற்றும் அரசாங்கச் சார்பற்ற தாபனங்களின் அலுவலர்களும் பங்கெடுத்தனர். இதற்கு சமாந்தரமாக, ஒக்ரோபர் 16 அன்று அதே இடத்தில் நிபுணர் குழு அரங்கும் நடைபெற்றது.





*கடல்சார் சூழல் கருத்தாடலிலிருந்து பின்னோக்குகள்*

இதில் மத்திய சூழல் அதிகாரசபை, அழிவு முகாமைத்துவ நிலையம், கரையோரப் பேணல், கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம், களனி பல்கலைக்கழகம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், சமுத்திர பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், இலங்கை பொலிஸ், கரையோரப் பேணல் திணைக்களம், அணு சக்தி அதிகார சபை, இலங்கைத் துறைமுக அதிகார சபை, மீன்பிடித்தொழில், நீரியல் வளங்கள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு, வனவாழ்வு பேணல் திணைக்களம், கொழும்பு டொக்யாட்ஸ் பிறைவேற் லிமிற்., கொழும்பிலுள்ள சர்வதேச கடற்படை, பொறியியல் பாடசாலை, இலங்கை கடற்படை, தேசிய நீரியல் வளங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றினால் பங்கெடுக்கப்பட்டது.

மூன்றாவது தேசிய கடல்சார் சூழல் கருத்தாடல் பேராசிரியர் தேவக வீரக்கோனின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. கருத்தாடலில் 14 நூற்கல்வி கட்டுரைகளும் மற்றும் 03 சுவரொட்டி சமர்ப்பணங்களும் பலதரப்பட்ட தாபனங் களினாலும் மற்றும் விஞ்ஞானிகளினாலும் சமர்ப்பிக்கப்பட்டன. உயிர்வாழ்கின்ற மற்றும் உயிர் வாழாத கடல்சார் வளங்கள், கடல்-சார் தீழ்ப்பினைத் தடுத்தல் மற்றும் இணைந்த தொழில்நுட்பங்கள், சுற்றுலாத்துறை மற்றும் கடல்சார் சூழல் அத்துடன் கடல்சார் சூழல் முறைமைகள் மீது மீன்பிடித்தல் கைத்தொழிலின் தாக்கம் ஆகியனவற்றை விஞ்ஞான அமர்வுக்கான தலைப்புக்கள் அடக்கியிருந்தன.

அத்தகைய செயற்றிட்டங்களை நடத்துவது புதிய ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளிப்பொன்றாக விளங்குகின்ற அதேவேளை கடல்சார் சூழலின் பாதுகாப்பு நோக்கி சிறந்த ஆதரவொன்றை முடிவுகள் வழங்கும்.

அதேவேளை, துறையில் உள்ள தகுதிவாய்ந்த நபர்களின் ஒன்றுகூடுதலினால் நடைபெற்ற கலந்துரையாடல்கள் எதிர்காலத்தில் கடல்சார் சூழலின் முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்கு முன்மொழிவுகளை முன்வைத்துள்ளன.

### 3.3.2 ‘Sri Lanka NEXT 2017 – நிபுணர் கலந்தாய்வு அரங்கு

‘Sri Lanka NEXT -2017 – நீலம் பச்சை பொருளாதாரமொன்றை நோக்கி’ என்பதற்கு இணையாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ‘Sri Lanka NEXT 2017 நிபுணர் கலந்தாய்வு அரங்கினை 2017 ஒக்ரோபர் 16 அன்று மகாவலி அபிவிருத்தி, சூழல் அமைச்சு நடத்தியது.

நிகழ்ச்சியில் ஐந்து கௌரவ விரிவுரைகளை இலங்கையின் பிரசித்தமான நூற்கல்வியாளர்கள் நடத்தினர். இவ்விரிவுரைகளில் கலாநிதி ரஞ்சித் மகிந்தபால மத்தியஸ்தராக விளங்கியதுடன், பின்வரும் கருப்பொருள்களில் விரிவுரைகள் ஆற்றப்பட்டன.

1. காலநிலை மாற்றத்தின் காரணமாக கடல்சார் சூழல் முறைமைகளில் இடம்பெறும் மாற்றங்கள்
2. மீன்பிடி கைத்தொழில் ஊடாக நீல பொருளாதாரமொன்றை நோக்கி
3. வங்காள விரிகுடாவில் கண்ட மேடையுடன் இணைந்துள்ள கடல்சார் சூழலிலிருந்து ஈட்டப்படக்கூடிய வாய்ப்புக் கள்
4. கப்பல்களிலிருந்து தோற்றுவிக்கப்படுகின்ற கடல்சார் சூழல் தீழ்ப்பு
5. சுற்றுலாத்துறை ஊடாக நீல பொருளாதாரமொன்றை நோக்கி

இச் செயற்றிட்டத்தில் அரசாங்க அலுவலர் களையும் பல்கலைக்கழக ஆசிரியர்களையும், அரசாங்கச் சார்பற்ற தாபனங்களின் அலுவலர்களையும் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களையும் கொண்ட சுமார் 100 நபர்கள் பங்கெடுத்தனர். செயற்றிட்டத்தின் செலவினம் ரூபா 1,023,861.60 ஆகும்.








### 3.3.3 மீனவர் சனசமூகத்திற்கு விழிப்பியல் செயற்றிட்டங்களை நடத்துதல்

கடல்சார் சூழல் தீழ்ப்பின் கட்டுப்பாட்டுக்கு பலதரப்பட்ட பங்காளர்களின் விழிப்பியலை உயர்த்துவது மிக முக்கியமானதாகும். இதனால், 2017 ஜூலை அன்று களமுல்லவில் இருந்தும் 2017 ஜூலை 4 அன்று களுத்துறையில் இருந்தும் பாடசாலைச் சிறுவர்களுக்கும் மற்றும் மீனவ சமூகத்திற்கும் விழிப்பியல் செயற்றிட்டங்கள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சியில் நடத்தப்பட்ட விரிவுரைகளுக்கு மேலதிகமாக, துண்டுப் பிரசுரங்களும் பங்கிடப்பட்டன.

### 3.3.4 “Aqtropica” சூழல் வள நிலையத்தைத் தாபித்தல்

களுத்துறை மாவட்டத்தில் கரையோர வலயத்தில் பெருமளவு கண்டல் மற்றும் கழிமுக சூழல் முறைமைகள் உள்ளன. இந்த முக்கியமான கடல்சார் சூழல் முறைமைகள் பற்றி தகவலைப் பெறுவதற்கு மட்டுப்படுத்த அளவிலான வளங்களே கிட்டுகின்றன. எனவே, களுத்துறை மாவட்டத்தில் பயாகலவில் புனித சிலுவைக் கல்லூரியில் “Aqtropica” சூழல் வளங்கள் நிலையத்தை களுத்துறை மாவட்ட அலுவலகம் தாபித்துள்ளது. சூழல் மீதான தகவலைப் பெறுவதில் அக்கறையைக் கொண்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பாடசாலைச் சிறுவர்கள் உட்பட யாரேனும் ஒருவருக்கு இந் நிலையம் திறந்துள்ளது.

## 3.4 சமுத்திரத்தைக் காப்பாற்றுவதற்கு சிசு சவிய கருத்திட்டம்

‘‘சமுத்திரத்தை பாதுகாப்பதற்கு சிசு சவிய கருத்திட்டத்தின்’’ கீழ் மொறட்டுவையில் உயன கனிஷ்ட வித்தியாலயத்தில் ஒரு மருத்துவ மூலிகைத் தோட்டம் தாபிக்கப்பட்டது.

கரையோர வலயத்தினுள் ‘‘வனப் போர்வையை’’ அதிகரிப்பதும் அத்துடன் பசுமை வலய மொன்றுக்கு வலயத்தை மாற்றுவதுமே அதன் பிரதான நோக்கமாகும். மருத்துவ மூலிகைத் தோட்டத்திற்கு அவசியமான மூலிகை நாற்றுக்களும் மற்றும் பராமரிப்பு பணிக்கு அவசியமான சிறு மண்வெட்டிகள், வாரிகள் மற்றும் நீர் விசிறல்கள் போன்ற கருவிகளும் அத்துடன் கழிவின் தோதான முகாமைத்து வத்திற்கு அவசியமான கலவைப் பசளையும் மற்றும் தொட்டிகளும் பாடசாலைக்கு வழங்கப்பட்டன.









*உயன கனிஷ்ட வித்தியாலயத்தின் மாணவர்கள் மூலிகை தோட்டத்தை தயாரித்த போது எடுக்கப்பட்ட ஒரு சில புகைப்படங்கள்*

### 3.5 கரையோர மக்களை விழிப்படையச் செய்வதற்காக அறிவித்தல் பலகைகளைப் பழுதுபார்த்தல்

2017ஆம் ஆண்டில் கரையோரம் மீது வாழ்கின்ற மக்களை அறிவூட்டுவதற்காக அறிவித்தல் பலகைகளின் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப் பட்டது. இது சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் 05 அறிவித்தல் பலகைகளுக்காக ஸ்டிக்கர்களை அச்சிடுதலைச் சம்பந்தப்படுத்தி யிருந்தது.

### 4. தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகால செயற்பாட்டுத் திட்டத்தை செயற்றிறனாக அமுலாக்குதல்

2008ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கும், பணிகளுக்கும் ஏற்ப இலங்கையின் ஆட்புல நீர்களில் இடம்பெறுகின்ற சடுதியான எண்ணெய் சிந்துதல் ஒன்றின் போது தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலச் செயற்பாட்டு திட்டத்தை அமுலாக்கு வதற்கான பொறுப்பினை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை கொண்டுள்ளது. 2017ஆம் ஆண்டில், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமை அலுவலகத்தில் சம்பவ முகாமைத்துவ குழாமுக்காக மூன்று கூட்டங்கள் நடைபெற்றன.

சடுதியான எண்ணெய் சிந்துதல் ஒன்றில் கெடுதலைத் தணிக்குமுகமாக எண்ணெயை அகற்றுவதற்கு அவசியமான துடைப்பங்களைத் தயாரிப்பதற்கான செய்நுட்ப அறிவை வழங்கும் நோக்கத்துடன் இலங்கை துறைமுக அதிகார சபையின் மகாபொல பயிற்சி நிறுவனத்தில் 2017 மாாச் 30 அன்று செயலமர்வொன்று நடத்தப்பட்டது. இதில் சம்பவ

முகாமைத்துவ குழுக்களுக்கு தொடர்பான நிறுவனங்களின் உறுப்பினர்கள் பங்கெடுத்தனர்.



*இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தி துடைப்பங்களை தயாரிக்கும் செயலமர்வின் சிறப்பம்சங்கள்*







**செயலமர்வின் சிறப்பம்சங்கள்**

எண்ணெய் சிந்துதலின் தாக்கத்தைத் தணிப்பதற்காக பயன்படுத்தப்படும் எண்ணெய் கழிவின் பாவனை மீது தேசிய கொள்கையொன்றுக்கான அவசியம் நிலவுகின்றபடியினால் அத்தகைய கொள்கை யொன்றை வகுத்தமைப்பதற்கு 2017 ஜூன் 30 அன்று ராஜகிரியவில் வங்கிமுறைக் கற்கைகளுக்கான நிலையத்தில் செயலமர்வொன்று நடத்தப்பட்டது.

தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்தைப் புதுப்பிக்கும் நோக்கமொன்றுடன், 2017 ஜூலை 14 அன்று ராஜகிரியவில் வங்கிமுறை கற்கைகளுக்கான நிலையத்தில் செயலமர்வொன்று நடத்தப்பட்டது. இதில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர்களும் மற்றும் தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் பொறுப்புக்கள் குறித்தொதுக்கப்பட்டுள்ள அலுவலர் களும் பங்கெடுத்தனர்.

எண்ணெய் சிந்துதலொன்றுக்கு பதிலிறுக்க வேண்டிய தரப்புக்களின் ஆற்றலளவை மேம்படுத்துமுகமாக ஓகஸ்ட் 15 முதல் 18 வரை 4 நாள் செயலமர்வொன்று நடத்தப்பட்டது. இது இலங்கை மன்றத்தில் நடைபெற்ற 3 நாள் விழிப்பியல் செயற்றிட்டமொன்றையும் மற்றும் டிக்ஓவிட்ட மீன்பிடி துறைமுகத்தில் நடைபெற்ற செயன்முறை செயலமர்வொன்றையும் கொண்டிருந்தது. இதில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் புதிய அலுவலர்களும் மற்றும் தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலச் செயற்பாட்டுத் திட்டத்துடன் இணைந்துள்ள நிறுவனங்களின் அலுவலர்களும் பங்கெடுத்தனர்.

எண்ணெய் சிந்துதல் ஒன்றில் பதிலிறுப்பதற்கான அறிவுடனும் மற்றும் செய்நுட்ப அறிவுடனும் சடுதியான எண்ணெய் சிந்துதல் ஒன்றில் செயற்படுகின்ற கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் வெளிக்கள அலுவலர்களைக் கொண்ட குழாமொன்றை அதிகாரமளிக்கின்ற பிரதான நோக்கத்துடன், 2017 நொவம்பர் 20, 21 மற்றும் 22

ஆகிய திகதிகளில் விஹார மஹா தேவி மனித அபிவிருத்தி நிலையத்தில் 3 நாள் செயலம்வொன்று நடத்தப்பட்டது.

நிகழ்வு ஆணை முறைமை மீது அவர்களுக்கு அறிவூட்டுவதற்காக தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலச் செயற்பாட்டிலான திட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட நிகழ்வு முகாமைத்துவக் குழாமுக்குச் சொந்தமான கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர்களுக்காக 2017 டிசம்பர் 8 அன்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமையலுவகத்தில் 1 நாள் செயலமர்வொன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

சமுத்திரத்தில் இடம்பெறுகின்ற சடுதியான எண்ணெய் சிந்துதல் ஒன்றில் நடவடிக்கை மீது நடத்தப்படுகின்ற SPILLEX 2017 என்ற பாங்கிலான பயிற்சி செயற்றிட்டம் முன்னைய வருடங்களைப் போல இவ்வருடமும் நடத்தப்பட்டது. கடலில் கப்பலொன்றில் இடம்பெறக்கூடிய தீயொன்றுக்கு எவ்வாறு பதிலிறுப்பது என்பது மீதும் அத்துடன் இடுக்கண்ணிலுள்ள கப்பல்களிலிருந்து பிரயாணிகளை எவ்வாறு வெளியேற்றுவது என்பது மீதும் செயன்முறைச் செயற்றிட்டங்கள் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை இடப்பிரப்பிலும், முதல் தடவையாக இடம்பெறுகின்ற இரசாயன சிந்துதல் ஒன்றுக்கு பதிலிறுப்பதற்காக அமுல்படுத்து வதற்கான செயற்திட்டம் தொடர்பில் வெள்ளவத்தை பகுதியுடன் இணைந்துள்ள சமுத்திரத்திலும் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையினால் நடத்தப்பட்டது. இச் செயற்றிட்டத்தின் கீழ், சடுதியான எண்ணெய் சிந்துதல் ஒன்றில் செயற்படுவதற்கு பயிற்சிச் செயற்றிட்டம் காலிமுகத்திடலிலுள்ள இலங்கைத் துறைமுகங்கள் அதிகாரசபை இடப்பரப்பிலும், வெள்ளவத்தையுடன் இணைந்துள்ள சமுத்திரத்திலும் டிசம்பர் 15 அன்று நடத்தப்பட்டது. செயற்றிட்டம் தொடர்பிலான செயற்பாடுகளின் பிரதான நிலையம் அழிவு முகாமைத்துவ நிலையமாகும். கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவலர்களுக்கும், தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகால செயற்பாட்டிலான திட்டத்தின் கீழ் பொறுப்புக்கள் குறித்தொதுக்கப்பட்ட அலுவலர் களுக்கும் நடைமுறையிலான தன்மையொன்றில் சம்பவங்களில் எவ்வாறு செயற்படுவது என்பது மீது சிறந்த பயிற்சியொன்று வழங்கப்பட்டது.





*அழிவு முகாமைத்துவ நிலையத்தில் நடத்தப்பட்ட பயிற்சிச் செயற்றிட்டத்தின் சிறப்பம்சங்கள்*












**நடைமுறையிலான முன்-பயிற்சி செயற்றிட்டத்தின் சிறப்பம்சங்கள**

கரையோர மாவட்டங்களில் இடம்பெறக்கூடிய சடுதியான எண்ணெய் சிந்துதல் ஒன்றுக்கு பதிலிறுப்பதில் சம்பந்தப்பட்டுள்ள நிறுவனங்களின் அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்கும் அத்துடன் அவர்களுக்கான பொறுப்புக்கள் எவையொன்பதை அவர்களுக்கு விளக்கமளிப்பதற்கும் செயற்றிட்டங் களை நடத்துவது மிகவும் பொருத்தமானதாகும். முன்னணியில் அந்த நோக்கத்துடன் விழிப்பியல் செயற்றிட்டங்களை மாவட்ட அலுவலகங்கள் நடத்துகின்றன.

இதனால், பேருவளை, களுத்துறை மற்றும் பாணந்துறை ஆகிய பிரதேசச் செயலகப் பிரிவுகளில் 35 அலுவலர்களுக்காக 2017 நொவம்பர் 12 அன்று நில்வள ஹொட்டேலில் விழிப்பியல் செயற்றிட்டமொன்று நடத்தப்பட்டது.

சட்ட மற்றும் நிறுவன அம்சங்களைப் பொறுத்தளவில் தேசிய எண்ணெய் சிந்துதல் அவசரகாலச் செயற்பாட்டிலான திட்டத்திற்கு பொறுப்பான நிறுவனங்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வைக் கொண்டுவருவதற்கான செயற்பாட்டின் மார்க்கமொன்றைத் தாபிக்கு முகமாக காலி மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளிலுள்ள கிராம சேவையாளர்களுக்கு விழிப்பியல் செயற்றிட்டமொன்று நடத்தப்பட்டது.

# 5. நிருவாக, சட்ட, மனித வளங்கள் அபிவிருத்தி, உள்ளகக் கணக்காய்வு, மற்றும் நிதிப் பிரிவுகளின் சேவைகள் மற்றும் பொறுப்புக்கள்

## 5.1 நிருவாகப் பிரிவு

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணியாளரின் முழுமையான முகாமைத்துவத்தின் சேவையின் ஆரம்பத்திலிருந்து இடைநிறுத்தப்படும் வரையும் அத்துடன் வேறு பிரிவுகளின் தொழிற்பாடுகளை வசதிப்படுத்துவதையும் நிருவாகப் பிரிவு பொறுப்பாகக் கொண்டிருந்தது. அதிகார சபையின் பிரதம நிறைவேற்று அலுவலரான பொது முகாமையாளரின் வழிகாட்டலின் கீழ் நிருவாகப் பிரிவு செயற்படுகின்றது.

## 5.2 சட்டப் பிரிவு

1. கொழும்பு துறைமுகத்தில் எரிபொருளை பரிமாற்றம் செய்த வேளை விளைவிக்கப் பட்ட கடல்சார் சூழல் தீழ்ப்புக்காக லங்கா மறிரைம் சேர்விசஸுக்குச் சொந்தமான கப்பலொன்றான MT Laxapanaக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கொன்று அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்டது. 2008இன் 35ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் சட்டத்தின் பிரிவு 26இன் கீழ் செயற்பட்டு, 2016 செப்ரெம்பரில் சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டதுடன், பொறுப்பான தரப்பிலிருந்து அதிகார சபையினால் ரூபா 08 மில்லியன் கொண்ட அபராதமொன்று பெறப்பட்டது.

2. அத்துடன், கடல்சார் சூழல் தீழ்ப்புக்காக இழப்பீடுகளின் அறவிடலுக்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சட்டத்தின் பிரிவு 34இன் கீழ் சிலோன் பெற்றோலியம் ஸ்ரோறேஜ் ரேர்மினல்ஸ் லிமிற்றெற்றுக்கு (CPSTL) எதிராக சிவில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டதுடன், இது 2015 டிசம்பரில் லுணாவ, தல்தியாவத்த கடலேரியில் CPSTLக்கு சொந்தமான குழாயொன்றிலிருந்து எண்ணெய் கசிவொன்றிலிருந்து விளைந்தது.

3. மேற்படி சட்டத்தின் கீழ் பிரகடனப் படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளை மீறியமை க்காக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டது. கடல்சார் சூழல் பாதுகாப்பு (கழிவு வரவேற்பு வசதிகள்) ஒழுங்குவிதிகளை மீறியமைக்காக 2017 ஓகஸ்டில் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த M.V. WEHR SCHULAU கப்பலின் இலங்கை பிரதிநிதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4. கழிவு நீரை வெளியேற்றியதன் மூலம் விளைவிக்கப்பட்ட கடல்சார் தீழ்ப்பொன்றுக்காக அங்குணகொல பெலஸ்ஸ நீதிவான் மன்றத்தின் ஊடாக தங்காலையில் உள்ள உணவக மொன்றுக்கு எதிராக 2017 மார்ச்சில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி சட்டத்தின் (கடலில் கொட்டுதலுக்காக அனுமதிச்சீட்டின் வழங்கல்) பிரிவு 27இன் பிரகாரம் பிரகடனப்படுத்தப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ், நடவடிக்கை எடுக்கப் பட்டதுடன், சட்டமா அதிபர் ஊடாக விடயம் முன்னோக்கிச் செல்கின்றது.

## 5.3 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

அதிகார சபையின் ஏனைய பிரிவு களைப் பார்க்கும் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு புதுமையான நிலையொன்றைக் கொண்டுள்ளதாக காட்டப்பட முடியும்.

அதிகார சபையின் தலைவரின் வழிகாட்டலினதும், நேரடியான மேற்பார் வையினதும் கீழ் தொழிற்படுவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளது. வருடாந்தம் தயாரிக்கப்படும் கணக்காய்வுத் திட்டத் தினதும், கணக்காய்வு செயல் திட்டத்தினதும் பிரகாரம், உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்படுவதுடன், அதிகார சபையின் நிதி, தொழிற்பாடுகள், நிருவாகம் மற்றும் சட்டப் பிரிவுகளின் பயனுறுதிவாய்ந்த செயற்பாடு ஆகியன மீது அளவீடுகளை நடத்துகின்றது. இந்த அளவீடுகளின் அவதானிப்புகளினதும், முடிவுகளினதும் மீதான அடிப்படையில் தயாரிக்கப்படும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கை தலைவரின் கவனத்திற்கும், தீர்மானத்திற்கும் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பின்வரும் பணிகள் சம்பந்தப்பட்டுள்ளன:

1. தப்பான நடவடிக்கைகளையும், மோசடி களையும் தடுப்பதற்காக தாபிக்கப் பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையியலை நுண்ணாய்தல்.
2. நேர்மையானதும், நியாயமானதுமான தன்மையொன்றில் ஏதேனும் நிதிசார் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்ப்பதற்காக நிதிசார் கட்டுப்பாட்டு முறைமையியலை நுண்ணாய்தல்.
3. ஊழியர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட கடமைகளும், செயற்பாடுகளும் செயற்றிறனாகவும், வினைதிறனாகவும் மேற்கொள்ளப்பட்டதா என்பதைக் கண்காணித்தல்.
4. அதிகார சபையின் செயற்பாட்டு மற்றும் நிருவாகச் செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படும் அதிகார சபையின் நிலையான சொத்துக்கள் செயற்றிறனாகவும், வினைதிறனாகவும் பயன்படுத்தப்பட்டனவா என்பதைக் கண்காணித்தல்.
5. அரசாங்கக் கொள்கைகளினதும், சட்டங்களினதும் மற்றும் விதிகளினதும் அத்துடன் அதிகார சபையின் உள்ளக விதிகளினதும் பிரகாரம் செயற்பாடுகள் உள்ளதாக என்பதைக் கண்காணித்தல்
6. அவசியப்படுமிடத்து விசேட விசாரணை களை நடத்துதல்

உள்ளகக் கணக்காய்வு செயல் திட்டத்தின் பிரகாரம், பிரதான பிரிவுகள் மட்டுமன்றி, ஆனால் பிராந்திய அலுவலகங்களும் கணக்காய்வுக்கு உட்பட்டவையாகும். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டமொன்றை நடத்துதல் இப்பிரிவின் கணக்காய்வு செயற்பாடுகளின் மத்தியில் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். பணிப்பாளர் சபையின் ஆலோசனைக் குழுவொன்றாக இக் குழு அறிமுகப்படுத்தப்பட முடியும். 2016ஆம் ஆண்டின் போது, நான்கு கூட்டங்களை குழு நடத்தியதுடன், அதன் கூட்டக் குறிப்புகளை தலைவருக்கும், பொது முகாமையாளருக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கும் சமர்ப்பித்தது.

## 5.4 மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

பணியாளரின் ஆற்றலளவையும், தகுதி யையும் உயர்த்துவதற்காக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் சகல பணியாட் உறுப்பினர்களைப் பயிற்றுவிப்பதே மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பு ஆகும். பிரதம நிறைவேற்று அலுவலராக விளங்குகின்ற பொது முகாமையாளரின் தனியான வழிகாட்டலின் கீழ் பிரிவு செயற்படுகின்றது.

**பிரிவின் பொறுப்புக்கள்:**

1. அதிகார சபையின் பணியாளரின் ஆற்றலளவையும், தகுதியையும் மேம்படுத்துவதற்கு பயிற்சித் தேவை களை அடையாளங் காணுதல், பயிற்சிக்காக வள நபர்களை அடையாளம் காணுதல், உள்நாட்டு/ வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் அடையாளங் காணப்பட்ட பயிற்சிநெறிகளுக்கு பணியாட் உறுப்பினர்களை வழி காட்டுதல்
2. பயிற்சியைப் பின்பற்றுகின்ற பணியாட் உறுப்பினர்கள் பயிற்சியைச் சரிவரப் பெறுகின்றார்களா என்பதைக் கண்காணித்தல், அல்லது குறைபாடுகள் உள்ளனவா அத்துடன் அத்தகைய குறைபாடுகளை வெற்றிகொள்வதற்கு மூலோபாயங்களை வகுத்தமைத்தலும், அமுலாக்குதலும்
3. பணியாளரின் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை மதிப்பாய்தல்
4. ஊழியர்களைத் தரப்படுத்துவதற்கும், பதவி உயர்த்துவதற்கும் ஒழுங்குகளைச் செய்தல்
5. பொது முகாமையாளரின் அங்கீகார த்திற்கு உட்பட்டு பணியாளரினதும், நிறுவனத்தின் தொழிற்பாடுகளினதும் மீது வெளியார் தரப்புக்களினாலும், நேரடி அமைச்சினாலும் கோரப்படும் தகவலை வழங்குதல்.
6. பணியாளர் சேமநலன் செயற்பாடுகளை நடத்துதல்.

## உள்நாட்டுப் பயிற்சியின் பங்கெடுப்பாளரின் பட்டியல் - 2017

| | பெயர் | பதவிப்பெயர் | பயிற்சிநெறி | காலம் | நிறுவனம் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.பி.எல்.எ.எம்.சி.விஜேவர்ணசூரிய | கடல்சார் சூழல் அலுவலர் | சோதித்தல் ஆய்வுகூடங்களில் ஆய்வுகூடப் பணியாளருக்கு விஞ்ஞானரீதியிலான உபகரணங்களைக் கையாளதல் மற்றும் பயன்படுத்தல் மீதான செயலமர்வு | 2017-01-20 | இலங்கை சோதித்தல் சங்கம் |
| | செல்வி எஸ்.எ.என்.எச்.சேரசிங்க, செல்வி எச்.பி.ரி.யு.யசரத்ன, திருமதி எச்.பி.எ.சதுரங்கி | உதவி கடல்சார் சூழல் அலுவலர் | | | |
| 2 | திரு. டி.ஆர்.சி.ஜயவர்தன | கணக்காளர் | Microsoft Office Excel Macro | 2017-01-26/27 | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் |
| 3 | திரு. டபிள்யு.டி.கே.மதுசங்க, செல்வி யு.எல்.ஜே.எ. பிரியன்வத, திருமதி ஆர்.எம்.எ.வி. ரத்னசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | தமிழ் மொழி பயிற்சிநெறி | 06 மாதங்கள் | அரச கரும மொழிகள் திணைக்களம் |
| 4 | திரு. எச்.எ.ஐ.சுரங்க | செயலாளர் | செயல்நோக்கமளித்தல் பயிற்சி செயற்றிட்டம் | 2017-02-22/23 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் |
| | செல்வி எம்.எம்.டி.முரமுதலி, திரு.பீ.என்.டி.பெரேரா, திரு. கே.ஜி.வை.ஐ.குலசூரிய, செல்விஆர்.பி.டி.ராஜபக்ஷ, செல்வி.எம்.எம்.ஜே.டி. மந்திலகே, திருமதி ஆர்.எ.யு.ரங்கனி | முகாமைத்துவ உதவியாளர் | | | |
| 5 | செல்வி ரி.எம்.எச்.டி.தென்னக்கோன், திருமதி எஸ்.எம்.டி.அதுகோரள | உதவி கடல்சார் சூழல் அலுவலர் | ஊழியர் பயனுறுதிவாய்ந்த முகாமைத்துவம் | 2017-02-27/28 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவனம் |
| | திரு.எச்.எ.ஐ.சுரங்க | செயலாளர் | | | |
| | திரு.டபிள்யு.டி.கே.மதுசங்க,திருமதி ஆர்.எம்.எ.வி.ரத்னசிங்க | முகாமைத்துவ உதவியாளர் | | | |
| 6 | திரு.டி.ஆர்.சி.ஜயவர்தன | கணக்காளர் | கைத்தொழில்களை பசுமையாக்குவதன் ஊடாக கூட்டாண்மை சூழல் நிலைத்திருக்கும்தன்மை | 2017-03-10 | தேசிய தூய்மை உற்பத்தி நிறுவனம் |
| | திரு.கே.பி.கே.ஐ.யு.பெர்னாண்டோ | உதவி முகாமையாளர் (திட்டமிடல்) | | | |
| 7 | திரு.எஸ்.பி.எஸ்.பண்டார, செல்வி பீ.ஜி.என்.ரி.பெரேரா, செல்வி எம்.ரி.ஆர்.ஜே.குமாரசிறி திருமதி ஆர்.எ.யு.ரங்கனி, திருமதி ஆர்.எம்.எ.வி.ரத்னசிங்க, செல்வி ஜி.டபிளயு.டி.எம்.கருணாரத்ன, திருமதி கே.ஜி.டி.கே.திஸ்ஸநாயக்க | முகாமைத்துவ உதவியாளர் | தூண்டல் பயிற்சி | 2017-04-03/05 | திறன் முன்னேற்ற நிதியம் |
| 8 | திரு. எச்.ரி.என்.ஐ.பியதாச | உதவி முகாமையாளர் (மாகாணம்) | ஹெலிகொப்டர் நீரடி தப்புதல் பயிற்சி | 2017-05-16/17 | இலங்கைக் கடற்படை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திரு.ரி.சிறீபதி | உதவி முகாமையாளர் (பதில்) | | | |
| | திரு. பி.எல்.எ.எம்.சி.விஜேவர்ணசூரிய | கடல்சார் சூழல் அலுவலர் | | | |
| 9 | கலாநிதி பி.பீ.தேரினி பிரதீப் குமார | பொது முகாமையாளர் | இரு நாள் பயிற்சி செயற்றிட்டம் | 2017-07-31/<br>2017-08-01 | CHE Adventure |
| | திரு. ஜே.எம்.பீ.எஸ்.பீ.ஜயவீர | பிரதி பொது முகாமை யாளர் (செயற்பாடு) | | | |
| | திரு. எ.ஜே.எம்.குணசேகர | முகாமையாளர் (செயற்பாடு) | | | |
| | செல்வி எ.காரியவாசம் | முகாமையாளர் (சட்டம்)) | | | |
| | திரு. ஆர்.சி.ஜே.ராஜபக்ஷ | முகாமையாளர் (திட்டமிடல்) | | | |
| | திரு. டி.ஆர்.சி.ஜயவர்தன | கணக்காளர் | | | |
| | திரு. எச்.ரி.என்.ஐ.பியதாச | உதவி முகாமையாளர் (மாகாணம்) | | | |
| | திரு. கே.பி.கே.ஐ.யு.பெர்னாண்டோ | உதவி முகாமையாளர் (திட்டமிடல்) | | | |
| | திரு. எஸ்.எம்.சி.குமாரகே | உதவி முகாமையாளர் (நிருவாகம்) | | | |
| | திரு. ரி.எஸ்.ரணசிங்க | உதவி முகாமையாளர் (W/N) | | | |
| | திருமதி டபிள்யு.எச்.எ.எஸ்.கே.ஹிட்டிபண்டார | உதவி முகாமையாளர் (HRD) | | | |
| | திரு. ஆர்.என்.பிரியதர்ஷன | உதவி முகாமையாளர் (கப்பல் அளவீடு) | | | |
| | திரு. ரி.சிறீபதி | உதவி முகாமையாளர் | | | |
| | திரு. ஜி.பி.நிலான்ஞனி | நிருவாக அலுவலர் | | | |
| | திரு. டபிள்யு.ஐ.கே.விஜேசிங்க, திரு.ஆர்.ரஜீகரன் திரு. பி.ஐ.எ.எம்.சி.விஜேவர்ணசூரிய, திரு. சி.டி.டபிள்யு.செனிவிரத்ன, திரு. எம்.ரி.கே.தெல்பசித்ரா, திரு.டபிள்யு.ஐ.எச்.கே.விஜயரத்ன, திரு.எஸ்.எல்.விக்ரமசிங்க | கடல்சார் சூழல் அலுவலர் | | | |
| | திரு.வை.பி.குமார, திரு.எஸ்.எ.எ.பிரசாத், திரு. பீ.என். குரே, திருமதி அச்சினி வத்சலா குமாரி, திரு.பீ.எ.தஹநாயக்க, திருமதி எச்.பி.ரி.யு.யசரத்ன திருமதி எஸ்.எம்.டி.அதுகோரள, திருமதி எ.எம்.கம்மன்பில்ல திருமதி ரி.எம்.எச்.டி.தென்னக்கோன், செல்வி எம்.எம்.சுபசிங்க, திருமதி ரி.கே.டி.யு.குணசேன, திரு. எச்.எ.எஸ்.டி.பெரேரா, திருமதி பீ.எம்.எம்.ராஜபக்ஷ, திரு.டி.எம்.ஆர்.சங்கல்ப, திருமதி எஸ்.எ.என்.எச.சேரசிங்க | உதவி கடல்சார் சூழல் அலுவலர் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | திரு. எல்.எல்.ஆர்.பீ. டி சில்வா, திரு. பி.எல்.எ.எம்.சி. விஜேவர்ணசூரிய | கடல்சார் சூழல் அலுவலர் | Operation of Metadatportal | 2017-06-14/15/16 | அழிவு முகாமைத்துவ அமைச்சு |
| 11 | கொமடோர் (மலிம) ஜயவீர | பிரதி பொது முகாமையாளர் (செயற்பாடு) | சூழல் கூருணர்வு காட்டி கருத்திட்டம் | 2017-08-21/22 | இலங்கைக் கடற்படை |
| | திரு.எல்.எல்.ஆர்.பீ. டி சில்வா | கடல்சார் சூழல் அலுவலர் | | | |
| 12 | திரு.டபிள்யு.சி.ஆர்.குமார, திரு. எல்.டபிள்யு.யு.எல்.லீனகல, திரு.பீ.என்.குரே, திரு.எல்.எச்.எ.எச்.எஸ்.ஹெட்டிஆரச்சி, திரு. பி.என்.எல்.தயாரத்ன | சாரதி | பாதுகாப்பு மற்றும் பயனுறுதி செலுத்தலிலான செயலமர்வு | 2017-09-26 | PRAG நிறுவனம் |
| 13 | திருமதி டபிள்யு.எச்.எ.எஸ்.கே.ஹிட்டிபண்டார | உதவி முகாமையாளர் (HRD) | தாபன சட்டக்கோவை மீது இரு தினங்களிலான செயலமர்வு | 2017-11-16/17 | இலங்கை மன்றம் |
| | திருமதி ஜி.பி.நிலான்ஜனி | நிருவாக அலுவலர் | | | |
| | திருமதி எஸ்.டி.பி.ஜி.சமரஜீவ, செல்வி கே.டி.டபிள்யு.எஸ். குமாரி, திரு. கே.டி.மதுசங்க, திருமதி ஆர்.பி.டி.எம்.சி. ராஜபக்ஷ, செல்வி யு.ஐ.ஜே.எ.பிரியன்வத | முகாமைத்துவ உதவியாளர் | | | |
| 14 | திருமதி எச்.எம்.எச்.உமேந்திர, திரு. எம்.எச்.மதுரங்க, திரு. கே.டி.குசால் மதுசங்க, திருமதி ஆர்.பி.டி.எம்.சி. ராஜபக்ஷ | முகாமைத்துவ உதவியாளர் | நிதி முகாமைத்துவ ஒழுங்குவிதி மீது இரு தினங்களிலான செயலமர்வு | 2017-11-23/24 | இலங்கை மன்றம் |
| 15 | திரு. கே.ஜி.வை.ஐ.குலசூரிய, திரு. பீ.என்.டி.பெரேரா, திருமதி பீ.எம்.டி. முரமுதலி | முகாமைத்துவ உதவியாளர் | அலுவலக முகாமைத்துவம் மீது இரு தினங்களிலான செயலமர்வு | 2017-12-07/08 | இலங்கை மன்றம் |
| 16 | திரு. எல்.எல்.ஆர்.பீ.சில்வா, திரு.பி.எல்.எ.எம்.சி. விஜேவர்ணசூரிய, திரு.சி.டி.டபிள்யு.செனிவிரத்ன, திரு.எஸ்.எல்.விக்ரமசிங்க | கடல்சார் சூழல் அலுவலர் | GIS பயிற்சி செயற்றிட்டம் | 2017-12-18 -23 | பேராதனைப் பல்கலைக் கழகம் |
| | திரு.எச்.பி.என்.கே.செனவிரத்ன, திரு.இ.பி.டி.என்.திலகரத்ன, செல்வி எம்.எம்.சுபசிங்க, திருமதி எஸ்.எம்.சி.அதுகோரள | உதவி கடல்சார் சூழல் அலுவலர் | | | |

# வெளிநாட்டு பயிற்சியின் பங்கெடுப்பாளரின் பட்டியல் - 2017

| | பெயர் | பதவிப்பெயர் | காலம் | செயற்றிட்டம் | நாடு |
|---|---|---|---|---|---|
| 1 | கலாநிதி பி.பீ.ரி.பி. குமார | பொது முகாமையாளர் | 2017-01-12/13 | PACE கருத்திட்டத்தின் வருடாந்தக் கூட்டம் | சுவீடன் |
| 2 | எ.காரியவாசம் | முகாமையாளர் (சட்டம்)) | 2017-04-26 - 28 | சட்டக் குழுவின் 104ஆவது அமர்வு | லண்டன் |
| 3 | கலாநிதி பி.பீ.ரி.பி. குமார | பொது முகாமையாளர் | 2017-05-09 - 11 | கடல்சார் பிளாத்திக்கு குப்பைக்கும் மற்றும் நுண் பிளாத்திக்கும் ஆலோசனைக் குழு | கென்யா |
| 4 | கே.சிவகுமார் | கடல்சார் சூழல் அலுவலர் | 2017-05-09 - 11 | அலாஸ்கா, அங்கோரேஜ்ஜில் ஐக்கிய நாடுகளில் பசுபிக் சூழல் பாதுகாப்பு அரங்கு (PESF) | அலாஸ்கா |
| 5 | றியர் அட்மிரல் ரோஹண பெரேரா | தலைவர் | 2017-07-03 - 07 | கடல்சார் சூழல் பாதுகாப்பு குழு (MEPC) கூட்டம் – IMO | லண்டன் |
| 6 | எஸ்.எல்.விக்ரமசிங்க | கடல்சார் சூழல் அலுவலர் | 2017-07-07 - 28 | கடல்சார் புவிசிரிதவியல் அளவீடு, கரையோர சூழல் பேணல் மீதான 2017 கருத்தரங்கு | சீனா |
| 7 | சி.டி.டபிள்யு.செனிவிரத்ன | கடல்சார் சூழல் அலுவலர் | 2017-08-14 - 25 | மாதிரிப்படுத்தலினதும், அடிப்படை பகுப்பாய்விலான தொழில்நுட்பங்களினதும் மீதான IAEA/RCA பிராந்திய பயிற்சி நெறி | இந்தோனிஷியா |
| 8 | டபிள்யு.ஐ.எச்.கே.விஜேரத்ன | கடல்சார் சூழல் அலுவலர் | 2017-09-12 - 14 | தென் ஆசிய கடல்கள் (SAS) பிராந்தியத்திற்கான நைரரசன் முகாமைத்துவத்தை அமுலாக்குவதற்கான பிராந்திய செயலமர்வு | மாலைதீவு |
| 9 | எ.ஜே.எம்.குணசேகர | முகாமையாளர் (செயற்பாடு) | 2017-09-18 - 23 | MTCC, சீனாவில் ஆசிய பிராந்திய செயலமர்வு | சீனா |
| 10 | கலாநிதி பி.பீ.ரி.பி. குமார | பொது முகாமையாளர் | 2017-09-21 - 23 | சமுத்திரம் - சீனாவுக்கும், தீவக நாடுகளுக்கும் தொடர்பான அமைச்சுரீதியிலான வட்டமேசை மற்றும் தீவக பேணல் மற்றும் அபிவிருத்தி மீதான பென்ரகன் சர்வதேச அரங்கு | சீனா |
| 11 | கலாநிதி பி.பீ.ரி.பி. குமார | பொது முகாமையாளர் | 2017-10-05 - 06 | 4ஆவது சர்வதேச எமது சமுத்திரம் 2017 மகாநாடு | மோல்ரா |

## 5.5 திட்டமிடல் பிரிவு

2017 மார்ச் அன்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் திட்டமிடல் பிரிவு தாபிக்கப்பட்டது. கூட்டுத்திட்டம் மற்றும் வருடாந்தத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் அத்துடன் 2008இன் இல.35 கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகாரச் சட்டத்தின் நீதிபரிபாலனத்தினுள் விடயங்களுக்கு கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பான தாகும்.

திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்:

1. பெருந்திட்டத்தைப் பேணுதல்/புதுப்பித்தல் மற்றும் திட்டமிடல் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.
2. பணிப்பாளர் சபைக்கு திட்டமிடல் பரிந்துரையை வழங்குதல்.
3. மகாவலி அபிவிருத்தி சூழல் அமைச்சுக்கு தகவலை வழங்குதல்.
4. திட்டமிடல் செயற்பாடுகளைக் கண்காணித்தல் மற்றும் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
5. திணைக்களங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பினை வசதிப்படுத்துதல்.
6. வருடாந்தத் திட்டங்களினதும் மற்றும் ஐந்து ஆண்டுத் திட்டத்தினதும் நிதிப்படுத்தலுக்கு வளங்களை மதிப்பிடுதல்.
7. ஐந்து வருடத் திட்டத்தை/வருடாந்தத் திட்டங்களைத் தயாரித்தல், கண்காணித்தல் மற்றும் மதிப்பாய்தல்.
8. தேவைகளுக்கு ஏற்ப வருடாந்தச் செயற்றிட்டத்தை மீளவாய்தல்.
9. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்ற த்தைக் கண்காணித்தல்.
10. SWOT பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல்.

## 5.6 நிதிப் பிரிவு

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் நிதிப் பிரிவு அதன் நிதிசார் முகாமைத்துவப் பணிகளுக்கு பொறுப்பைக் கொண்டுள்ளது. கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையைப் பாதிக்கும் சகல பொருளாதார மற்றும் நிதிசார் செயற்பாடுகளுக்கு நிதிசார் வளங்களை நிதிப் பிரிவு ஒதுக்குவதுடன், சகல நோக்கங்களையும் சாதிப்பதற்காக நிதிசார் வளங்களைப் பங்கிடுகின்றது. செயற்றிறனானதும், பயனுறுதி வாய்ந்ததுமான தன்மையொன்றில் அதிகார சபையின் நிதிசார் சேவைகளை விநியோகிப்பதும், அதற்கு வழிகாட்டலை வழங்குவதும், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்வதும் அத்துடன் அதிகார சபையின் நிதிசார் வளங்களைத் தொடர்ச்சியான கண்காணித்தல் மூலம் கட்டுப்படுத்துவதும் நிதிசார் பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

### செயற்பாடுகள்

1. வருடாந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
2. நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்தல்.
3. நிதிசார் கூற்றுக்களினதும், மாதாந்த வரவு-செலவுத் திட்டங்களினதும் மீதான அறிக்கைகளை வழங்குதல்.
4. சம்பளங்களுக்கும் மற்றும் ஊதியங்களுக்கும் அறிக்கைகளை வைத்திருத்தலும், கொடுப்பனவு களைச் செய்தலும்
5. கருத்திட்டங்களை உயிர்ப்புடன் வைத்திருத்தல்.
6. சகல கொடுப்பனவுகளையும் செய்தல்.
7. கடன்களினதும், முற்பணங்களினதும் மீதான கணக்கீட்டுச் செயற்பாடுகள்.
8. வங்கிகளுடன் ஒருங்கிணைப்பு.
9. கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக் களத்துடன் ஒருங்கிணைப்பு.
10. மூலதனங்கள் தொடர்பில் முகாமைத்து வத்துவத்தையும், வேறு செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்

### ஆண்டின் போது நடத்தப்பட்ட விசேட செயற்பாடுகள்

01. நடைமுறைக் கணக்கில் நிலவுகின்ற மீதிகளை ஒரு நாள் அழைப்பு வைப்புக்களில் மூலதனமிடுவதன் மூலம் ரூபா 1,211,704.17 கொண்ட வட்டி வருமானமொன்றை அதிகார சபையினால் பெறக்கூடியதாக இருந்தது

02. ஆண்டு அறிக்கை மற்றும் கணக்காளர் விருதில் முதல் இடத்தை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை வெற்றியீட்டியது.

### 5.6.1 நிதிசார் முன்னேற்ற அறிக்கை – 2017ஆம் ஆண்டுக்கு மீளவரும் செலவினம

| நோக்கக் குறியீடு | நோக்கின் விவரணம் | 2017க்கான மதிப்பீடு | 31.12.2017இல் உண்மையான செலவினம் | 31.12 2017இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | **மீளவரும் செலவினம்** | | | |
| | **தனிப்பட்ட வேதனாதிகள்** | | | |
| 1001 | சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 94,862,556,00 | 95,930,469.57 | (1,067,913.57) |
| 1002 | மேலதிக நேரவேலை மற்றும் விடுமுறைக் கொடுப்பனவு | 2,100,000.00 | 1,196,390.93 | 903,609.07 |
| 1003 | வேறு படிகள் | 4,760,000.00 | 3,636,101.71 | 1,123,898.29 |
| | **மொத்தம்** | **101,722,556.00** | **100,762,962.21** | **959,593.79** |
| | **பிரயாணச் செலவினங்கள்** | | | |
| 1101 | உள்நாடு | 3,938,000.00 | 2,859,846.74 | 1,084,153.26 |
| 1102 | வெளிநாடு | 3,000,000.00 | 2,259,970.79 | 740,029.21 |
| | **மொத்தம்** | **6,938,000.00** | **5,113,817.53** | **1,824,182.47** |
| | **விநியோகங்கள** | | | |
| 1201 | காகிதாதி மற்றும் அலுவலகத் தேவைகள் | 2,000,000.00 | 1,486,419.02 | 513,580.98 |
| 1202 | எரிபொருள் | 3,100,000.00 | 2,144,111.34 | 955,888.66 |
| 1205 | வேறு | 350,000.00 | 88,000.00 | 262,000.00 |
| | **மொத்தம்** | **5,450,000.00** | **3,718,530.36** | **1,731,469.64** |
| | **பராமரிப்புச் செலவினங்கள்** | | | |
| 1301 | வாகனங்கள் | 4,728,000.00 | 2,947,345.86 | 1,781,454.14 |
| 1302 | இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 1,800,000.00 | 865,622.70 | 934,377.30 |
| 1303 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணங்கள் | 500,000.00 | 361,912.69 | 138,087.31 |
| | **மொத்தம்** | **7,028,800.00** | **4,174,881.25** | **2,853,918.75** |
| | **சேவைகள்** | | | |
| 1401 | போக்குவரத்து | - | - | - |
| 1402 | தபால் மற்றும் தொலைதொடர்பு | 3,108,000.00 | 2,674,833.94 | 433,166.06 |
| 1403 | மின்சாரம் மற்றும் நீர் | 4,140,000.00 | 3,411,830.84 | 728,169.16 |
| 1404 | குத்தகை வாடகை மற்றும் சோலைவரிகள் | 17,241,000.00 | 16,310,233.22 | 930,766.78 |
| 1405 | வேறு மீளவரும் செலவினங்கள் | 8,150,000.00 | 7,152,714.87 | 997,285.13 |
| | **மொத்தம்** | **32,639,000.00** | **29,549,612.87** | **3,089,387.13** |
| | **மீளவரும் செலவினத்தின் கூட்டி மொத்தம்** | **153,778,356.00** | **143,319,804.22** | **10,458,551.78** |

## 5.6.2 நிதிசார் முன்னேற்ற அறிக்கை – 2017ஆம் ஆண்டுக்கு மூலதனச் செலவினம்

| நோக்கக் குறியீடு | நோக்கின் விவரணம் | 2017க்கான மதிப்பீடு | 31.12.2017இல் உண்மையான செலவினம் | 31.12 2017இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|---|---|
| | **புனரமைப்பு மற்றும் மூலதனச் சொத்துக்களின் மேம்படுத்தல்** | | | |
| 2001 | கட்டிடங்கள் மற்றும் நிருமாணங்கள் | 1,000,000.00 | 952,175.89 | 18,144.53 |
| 2002 | பொறி, இயந்திராதி மற்றும் உபகரணங்கள் | 500,000.00 | 375,584.21 | 124,415.79 |
| 2003 | வாகனங்கள் | 1,430,000.00 | 1,293,268.64 | 136,731.36 |
| | **மொத்தம்** | **2,930,000.00** | **2,621,028.74** | **308,971.26** |
| | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்** | | | |
| 2102 | மரத்தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | 1,650,000.00 | 1,239,024.79 | 410,975.21 |
| 2103 | இயந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் | 3,550,000.00 | 2,370,926.88 | 1,179,073.12 |
| 2104 | கட்டிடம் மற்றும் கட்டமைப்பு - காலி கட்டிடம் | 22,380,000.00 | 21,900,713.47 | 479,286.53 |
| | **மொத்தம்** | **27,580,000.00** | **25,510,665.14** | **2,069,334.86** |
| 2401 | பயிற்சி மற்றும் ஆற்றலளவைக் கட்டியெழுப்புதல் (மனித வளங்கள் அபிவிருத்தி) | | | |
| | 1. அலுவலருக்கு பயிற்சியை வழங்குதல் | 1,500,000.00 | 1,531,974.00 | (31,973.56) |
| | 2. நூல்களினதும், சஞ்சிகைகளினதும் கொள்வனவு | 200,000.00 | 200,650.00 | (650.00) |
| | 3. சேமநலன் வசதியின் முன்னேற்றம் | 150,000.00 | 56,555.00 | 93,445.00 |
| | **மொத்தம்** | **1,850,000.00** | **1,789,179.00** | **60,821.44** |
| 2502 | **வேறு மூலதனச் செலவினம்** | | | |
| | 1. கடல் குளித்தல் அமைவிடங்களினதும், கடற்கரைகளினதும் மேம்படுத்தல் | 9,741,000.00 | 8,402,237.00 | 1,338,763.00 |
| | 2 மீன்பிடித் துறையிலிருந்து தீழ்ப்பினைத் தடுத்தல் | 1,205,000.00 | 910,273.43 | 294,726.57 |
| | 3 கடல்சார் உடைவு முகாமைத்துவம் | 224,000.00 | 76,363.50 | 147,636.50 |
| | 4 கரையோர மற்றும் கடல்சார் தீழ்ப்புக் கட்டுப்பாடு | 3,061,000.00 | 3,111,030.45 | (50,030.45) |
| | 5 கடல்சார் சூழல்முறைமை மீதான ஆய்வுகள் | 1,557,000.00 | 1,418,926.80 | 138,073.20 |
| | 6 சர்வதேச சமவாயத்தினதும், சட்டத் திருத்தத்தினதும் மீதான அமுலாக்கம் | 1,100,000.00 | 976,547.50 | 123,453.00 |
| | 7 கப்பல்களினால் விளைவிக்கப்படும் தீழ்ப்பினைக் குறைந்தபட்சமாக்குதல் | 3,270,000.00 | 2,968,110.08 | 301,889.92 |
| | 8 கடல்சார் தொடர்பான பிரச்சனைகளுக்கு நிறுவனரீதியிலான வரைச்சட்டமொன்றைத் தாபித்தல் | 6,400,000.00 | 6,034,599.00 | 365,401.00 |
| | 9. கடல்சார் சூழல் மீது விழப்பியலைக் கடடியெழுப்புதல் | 4,408,000.00 | 4,115,096.52 | 292,903.48 |
| | 10. தேசிய நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துதலும், நடத்துதலும் | 8,760,000.00 | 7,688,833.61 | 1,071,166.39 |
| | 11. விபத்திலான எண்ணெய் மற்றும் இரசாயனச் சிந்துதலின் தாக்கத்தைக் கட்டுப்படுத்ததல் | 14,714,000.00 | 10,880,038.23 | 3,833,961.77 |
| | 12. ஆய்வுகூட வசதிகளை தரமுயர்த்துதல் | 3,050,000.00 | 3,050,077.88 | (77.88) |
| | 16.1 பசுமை மீன்பிடித்தல் துறைமுகக் கருத்திட்டம் | 150,000.00 | - | 150,000.00 |
| | **மொத்தம்** | **57,640,000.00** | **49,632,133.50** | **7,857,866.50** |
| | **மூலதன செலவினத்தின் மொத்தம்** | **90,000,000.00** | **79,553.005.94** | **10,296,994.06** |

# 6. அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள்

## 6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

### 6.1.1 கூட்டாண்மைத் தகவல்

2008இன் இல.35, கடல்சார் தீழ்ப்பு பாதுகாப்பு அதிகார சபையின் கீழ், நியதியாக்க உறுப்பொன்றாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. அதன் தலைமை அலுவலகம் இல.177, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05இல் அமைந்துள்ளது.

### 6.1.2 பிரதான செயற்பாடுகளும், செயற்பாடுகளின் தன்மையும்

தற்போதையதும், எதிர்காலத்திலுமான கடல்சார் சூழலில் நிலைத்திருக்கத்தக்க முகாமைத்து வத்திற்காக ஒழுங்குவிதிகளின் திறமைவாய்ந்த வினைப்படுத்தலினதும், கரிசனையிலான சர்வதேச சமவாயங்களின் அமுலாக்கத் தினதும் பங்காளரினதும் மற்றும் வேறு வளங்களின் ஒருங்கிணைப்பினதும் அத்துடன் ஒன்றுதிரட்டலினதும் ஊடாக இலங்கையின் நீர்நிலைகளில் கடல்சார் தீழ்ப்பினை தடுப்பதும், கட்டுப்படுத்துவதும் அத்துடன் நிருவகிப்பதுமே கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதான செயற்பாடுகளாகும்.

### 6.1.3 தயாரிப்பின் அடிப்படை

#### 6.1.3.1 இணக்கத்தின் கூற்று

நிதிசார் நிலையின் கூற்று, நிதிசார் செயற்றிறனின் கூற்று, நிகர சொத்துக்கள்/ ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று, பணப்புழக்கக் கூற்று, குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் நிதிசார் கூற்றுக்கான குறிப்புகள் ஆகியவற்றை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள் கொண்டுள்ளன. இக்கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமம் மற்றும் அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமம் ஆகியவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும், சமர்ப்பிப்பதற்கும் 2010ஆம் ஆண்டிலிருந்து செயற்படத்தக்கதாக இலங்கை அரசாங்கத் துறை கணக்கீட்டு நியமங்களை கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை பயன்படுத்துகிறது.

நிதிசார் கூற்றுக்கள் SLPSAS 01இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுவதுடன், SLPSAS கிட்டாத விடத்து, நிதிசார் கூற்றுக்களின் தயாரிப்புக்காக பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கணக்கீட்டு நியமங்கள் பிரயோகிக்கப்படுகின்றன.

6.1.3.2 பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு தத்துவங்களுடன் வரலாற்று ரீதியிலான ஆகுசெலவு அடிப்படை யொன்றின் மீது கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் 2015ஆம் ஆண்டுக்கான நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டுள்ளன.

6.1.3.3 கணக்குகளைப் பாதிக்கும் பண வீக்கத்திலான காரணிகளுக்காக சீராக்கல் கள் செய்யப்படவில்லை.

6.1.3.4 திரண்ட அடிப்படையின் மீது வருமானமும், செலவினமும் கணக்கிடப் பட்டுள்ளன.

6.1.3.5 முன்னைய நிகழ்வுகளின் விளை வொன்றாக தற்போதைய கடப்பாடொன்று க்கு இருக்கும் போது ஐந்தொகையில் பொறுப்புக்கள் அங்கீகரிக்கப்படுகையில், பொருளாதார நன்மைகளைச் சூழவுள்ள வளங்களின் செலவீடொன்றின் இணக்கம் விளையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

6.1.3.6 நிதிசார் கூற்றின் திகதியில் கடன் வழங்குனர்களின் கோரிக்கையில் கொடுப்ப னவுக்குரிய கடப்பாடுகளும், அத்தகைய திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் கொடுப்பனவுக்குரிய பொறுப்புக்களும் நிதிசார் நிலையின் கூற்றில் நடைமுறை சாராப் பொறுப்புக்களாக கருதப்படுகிறது.

6.1.3.7 கடன்வழங்குனர்களின் கோரிக்கை யில் அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு ஆண்டுக்கு மேலாக கொடுப்பனவுக் குரிய கடப்பாடுகள் நிதிசார் நிலையின் கூற்றில் நடைமுறைசாராப் பொறுப்பு க்களாகக் கருதப்படுகின்றன.

### 6.1.4 ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள்

6.1.4.1 அவற்றின் ஆகுசெலவில் ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் ஆகியன பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் பயனுள்ள ஆயுளின் மேலாக அவற்றின் ஆகு செலவைப் பெறுமதியழிப்பதற்காக நேர் கோட்டு அடிப்படை மீது அவை மதிப்பிறக்கப்பட்டுள்ளன. அவற்றை மதிப்பிறக்குவதற்கு பயன்படுத்தப்பட்ட வீதங்கள் வருமாறு:

| சொத்துக்கள் | மதிப்பிறக்க வீதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| கணனிகள் மற்றும் தொடர்பான உபகரணங்கள் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| மரத்தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 10% |
| ஆய்வுகூட சாதனங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்கள் | 10% |
| நூல்கள் | 10% |

6.1.4.2 அவற்றின் உத்தேசமான பயன் பாட்டுக்காக ஆதனங்களினதும், பொறி களினதும் மற்றும் சாதனங்களினதும் மதிப்பிறக்கம் ஆரம்பமாவதுடன், அவற்றின் பயனுள்ள ஆயுளுக்கு மேலாக நேர் கோட்டு அடிப்படை மீது மதிப்பிறக்கப் படுகின்றது.

### 6.1.5 வருமானம்

இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைத்த உதவுதொகைகளே அதிகார சபையின் பிரதான வருமானமாகும். மேலதிகமாக, உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் அதிகார சபையினால் தோற்றுவிக்கப்படும் ஒரு சிறிய தொழிற்பாட்டிலான வருமானமொன்றுள்ளது.

1. தேசிய வள மதிப்பாராய்தல் செயற்பாட்டுக்கு உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல்
2. எரிபொருள் நிரப்புதல் செயற்பாடு களுக்கு உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல்
3. எண்ணெய் சிந்துதல் அவசரகால திட்டத்தை அங்கீகரித்தல்
4. கழிவு வரவேற்பு சேவையுடன் தொடர்பான செயற்பாடுகளுக்கு உத்தரவுப்பத்திரங்களை வழங்குவதல்

#### 6.1.5.1 அதிகார சபையினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம்

அதிகார சபையினால் தோற்றுவிக்கப்பட்ட வருமானம் திரண்ட அடிப்படையின் மீது அங்கீகரிக்கப்படுகின்றது.

#### 6.1.5.2 பொது திறைசேரியிடமிருந்து கிடைத்த உதவுதொகைகள்

மூலதனம் மற்றும் மீளவரும் என இரு வகைகளைக் கொண்ட உதவு தொகைகளை அதிகார சபை பெறுகின்றது. இந்த உதவுதொகைகளைக் கணக்கிடு வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கையானது கீழே வழங்கப்பட்டுள்ளது:

#### 6.1.5.3 மூலதன உதவுதொகைகள்

**6.1.5.4** ஆதனம், பொறி மற்றும் சாதனம் ஆகியவற்றின் கையடக்கம் அல்லது நிருமாணம் ஆகியவற்றுக்கு கிடைத்த அரசாங்க உதவுதொகைகள் அத்தகைய ஆதனத்தினதும், பொறியினதும் மற்றும் சாதனத்தினதும் பயனுள்ள ஆயுளைக் கொண்ட காலத்தின் மேலாக வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**6.1.5.5** இலங்கையின் கடல்சார் தீழ்ப்பினைத் தடுப்பது தொடர்பான செயற்பாடுகளுக்கு கிடைத்த உதவு தொகைகள் இயற்கையாகவே உருப் படியற்ற சொத்துக்களைத் தோற்று விக்கின்றது. ஆனால், உருப்படியற்ற சொத்துக்களில் முன்வைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட மூலப்பிரமாணத்தை அது நிறைவேற்றுவதில்லை. எனவே, கடல்சார் தீழ்ப்பு தடுப்புச் செயற்பாடுகள் தொடர்பிலான செலவினங்கள் அத்தகைய செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்ட ஆண்டில் வருமானமாக அங்கீகரிக்கப்படுகின்றன.

#### 6.1.5.6 மீளவரும் உதவுதொகைகள்

மீளவரும் செலவினத்திற்காக கிடைக்கின்ற உதவுதொகைகள், அவை கிட்டுகின்ற அதே வருடத்தில் வருமானமாக அங்கீகரிக்கப்படு கின்றன.

### 6.1.6 ஊழியர் நன்மைகள்

#### 6.1.6.1 கட்டாயமான பங்களிப்புத் திட்டம்

கட்டாயமான பங்களிப்புத் திட்டத்தின் பொறுப்புக்கள் தொடர்பான செலவினங்கள் அவை இடம்பெறுகின்ற காலத்தில் செலவினங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஊழியர்களின் மொத்த ஊதியங்களில் 15%ஐயும், மற்றும் 3%ஐயும் முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் க.சூ.பா.அ.ச. பங்களிக்கின்றது.

#### 6.1.6.2 வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டம்

வரையறுக்கப்பட்ட நன்மைத் திட்டமொன்றே பணிக்கொடையாகும். தொடர்பான நியதியாக்கத்தின் பிரகாரம் பணிக் கொடையை கொடுப்பனவு செய்வதற்கு க.சூ.பா.அதிகாரசபை பாத்திரவாளியாகும். இந்த பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக சேவையின் முடிக்கப்பட்ட முதலாவது ஆண்டிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு முடிக்கப்பட்ட சேவையாண்டின்

அரை மாத சம்பளம் அத்துடன் வாழ்க்கைச்செலவு படியையும் கொண்ட சமமான இத்தொகை நிதிசார் நிலைகளின் கூற்றில் முன்காவப்பட்ட ஒரு ஏற்பாடாக விளங்கு கின்றது.

1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடையின் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், சகல ஊழியர்களுக்கும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடு நிதிசார் நிலையின் கூற்றில் நடைமுறை-சாராப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

### 6.1.7 ஒப்பீட்டுரீதியிலான தகவல்

அவசியப்படுமிடத்து, நடைமுறை ஆண்டின் சமர்ப்பணத்திற்கு இணக்குவதற்காக ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கைகள் மீள் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

### 6.1.8 ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறுகின்ற நிகழ்வுகள்

சகல பொருள் ஐந்தொகைக்கு முந்திய நிகழ்வுகள் கரிசனைக்கெடுக்கப்பட்டுள்ள துடன், பொருத்தமானவிடத்து, நிதிசார் கூற்றுகளுக்கான குறிப்புகளின் அமைப்பில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

### 6.1.9. பணப்புழக்கக் கூற்று

மறைமுகமான முறையைப் பயன்படுத்தி பணப்புழக்கக் கூற்று தயாரிக்கப்பட்டு ள்ளது.

### 6.1.10 பதிவினதும், சமர்ப்பணத்திலானதுமான நாணயம்

இந்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், இதுவே க.சூ.பா.அ.அ.இன் தொழிற் பாட்டிலான நாணயமாகும்.

- **பொருட்பட்டியல்**

ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட பொருட்பட்டியல்கள் அவற்றின் ஆகு செலவுகள் மீதான அடிப்படையில் நிதிசார் கூற்றுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகு செலவில் அல்லது தேறிய பின்போடப்பட்ட பெறுமதியில் எது குறைவானதோ அதில் ஆண்டு இறுதிக் கையிருப்பு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- **நூலக நூல்கள்**

அவற்றின் ஆகுசெலவில் நூலக நூல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆவற்றின் பயனுள்ள வாழ்க்கையின் மேலாக நேர்கோட்டு முறை மீதான அடிப்படையில் அவை மதிப்பிறக்கப் பட்டுள்ளன.

- **இரசாயனங்கள் மற்றும் கண்ணாடிப் பண்டக் கையிருப்புக்கள்**

இரசாயனங்களையும் கண்ணாடிப் பாத்திரங்களையும் பொறுத்தளவில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற ஆண்டின் போது இலாபத்திற்கும் நஷ்டத்திற்கும் இரசாயனங் களினதும், கண்ணாடிப் பண்டங்களினதும் மொத்தக் கொள்வனவு ஆகுசெலவு சுமத்துவதே அதிகார சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாகும்.

ஆண்டின் இறுதியில் இரசாயனங்களின் அச்சொட்டான தொகையை கணக்கிடுவதில் நடைமுறையிலான கஷ்டங்களின் காரணமாக இந்த முறை பின்பற்றப் பட்டதுடன், குறுகியகால நேரமொன்றின் போது சில கண்ணாடிப் பண்டங்கள் பதிலீடு செய்வதற்கான அவசியம் இருந்தது. எனினும், பதிவுசெய்யும் நோக்கத்திற்காக இரசாயனங்களுக்கும் மற்றும் கண்ணாடிப் பண்டங்களுக்கும் கையிருப்புப் பேரேடுகளை ஆய்வுகூடம் பராமரிக்கின்றது.

## 6.2 நிதிசார் நிலையின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
### 2017 டிசம்பர் 31இல் உள்ளவாறு
### நிதிசார் நிலையின் கூற்று

| சொத்துக்கள் | குறிப்பு | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | . | . |
| கையிருப்பு | 10 | 8,985,447.03 | 30,024,657.89 |
| கடன்தருனர்கள் | 11 | 972,183.09 | 48,999.00 |
| வைப்புகள் | 12 | 2,959,000.00 | 2,596,000.00 |
| முன்-கொடுப்பனவுகள் | 13 | 2,063,022.50 | 2,204,656.60 |
| குறுகிய கால மூலதனம் (திறைசேரி உண்டியல்கள்) | 29 | 11,586,643.28 | 15,816,119.87 |
| அறவிடப்பட வேண்டிய பணியாளர் கடன் | 14 | 9,847,296.72 | 5,267,412.05 |
| பொருட்பட்டியல் | 28 | 4,626,177.25 | 4,182,303.30 |
| **நடைமுறைசாராச் சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி, சாதனங்கள் | 09 | 141,729,762.47 | 112,613,398.34 |
| உருப்படியற்ற சொத்துக்கள் | 23 | 1,903,942.41 | 2,209,336.50 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **184,673,474.75** | **174,962,884.45** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| திரண்ட கொடுப்பனவுகள் | 15 | 43,173,221.37 | 23,001,605.99 |
| முன்-கிடைத்த வருமானக் கணக்கு | 24 | 1,974,856.70 | 2,398,767.00 |
| **நடைமுறைசாராப் பொறுப்புக்கள்** | | | |
| இடுக்கண் கடன் நிதியங்கள் | 16 | 13,495,377.97 | 7,443,919.99 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 17 | 19,676,724.00 | 13,736,758.00 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **78,320,180.04** | **46,581,050.18** |
| **நிகர சொத்துக்கள்** | | **106,353,294.71** | **128,381,834.27** |
| **ஒப்புரவு** | | | |
| அரசாங்க உதவுதொகைகள் மற்றும் மூலதனம் (பின்போடப்பட்ட உதவுதொகைகள்) | 18 | 87,218,575.98 | 80,308,318.58 |
| நடந்துகொண்டிருக்கும் வேலை மீதான மூலதனச் செலவினம் | 20 | 56,415,130.47 | 34,514,417.00 |
| பயன்படுத்தப்படுவதற்கான மூலதன மான்யம் | 26 | 826,941.80 | 12,048,760.59 |
| கையிருப்புக்களுக்கான மூலதன உள்ளீடு | 25 | 3,858,594.00 | 3,858,594.00 |
| திரண்ட மேன்மிகை(பற்றாக்குறை) | 22 | 13,186,647.35 | 17,416,123.94 |
| திரண்ட மேன்மிகை/பற்றாக்குறை | **21** | **(55,152,594.10)** | **(19,764,379.11)** |
| **மொத்த ஒப்புரவு** | | **106,353,294.71** | **128,381,834.27** |

## 6.3 நிதிசார் நிலையின் கூற்று

**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை**
**2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான**
**நிதிசார் செயற்றிறனின் கூற்று**

| **வருமானம்** | **குறிப்பு** | **2017 ரூபா** | **2016 ரூபா** |
|---|---|---|---|
| திறைசேரி உதவுதொகைகள் | 1 | 136,377,136.52 | 196,990,302.56 |
| பதிவு மற்றும் அனுமதிப்பத்திரங்கள் | 2 | 35,824,761.42 | 17,430,909.42 |
| வேறு வருமானம் | 3 | 1,272,940.65 | 5,029,616.86 |
| **மொத்த வருமானம்** | | **173,474,838.59** | **219,450,828.84** |
| **செலவினங்கள்** | | | |
| சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 4 | 107,184,813.71 | 96,641,764.42 |
| விநியோகங்கள் மற்றும் பயன்படுத்தப்பட்ட பாவனைக்குரியவைகள் | 5 | 7,893,411.61 | 8,747,684.32 |
| வேறு மீளவரும் செலவினம் | 6 | 34,634,645.40 | 29,518,560.70 |
| உதவுதொகை மற்றும் வேறு கைமாற்றத்திலான கொடுப்பனவு | 7 | 42,784,424.18 | 71,654,455.72 |
| நிதிசார் செலவினங்கள் | 8 | 28,785.00 | 54,533.78 |
| மதிப்பிறக்கம் மற்றும் கடன் தீர்ப்புச் செலவினங்கள் | 9 | 16,560,673.00 | 15,800,198.02 |
| **மொத்தச் செலவினம்** | | **209,086,752.90** | **222,417,196.96** |
| **காலத்திற்கான மேன்மிகை/ (பற்றாக்குறை)** | | **(35,611,914.31)** | **(2,966,368.12)** |

## 6.4 ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
### 2017 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
### ஒப்புரவில் மாற்றங்களின் கூற்று

| | பின்போடப் பட்ட உதவு தொகைகள் | பொருட்பட்டியல்கள் தொடர்பான உதவு தொகைகள் | பயன்படுத்துவதற்கான மூலதன உதவு தொகை | WIPஐக் கட்டுவது தொடர்பான மூலதன உதவு தொகை | க.சூ.பா.அ. நிதியம் | திரண்ட மேன்மிகை/ பற்றாக்குறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| 31/12/2016இல் உள்ளவாறு மீதி | 80,308,319.34 | 3,858,594.00 | 12,048,760.59 | - | 17,416,123.94 | (19,764,379.11) | 93,867,418.76 |
| **கணக்கீட்டுக் கொள்கைகளின் மாற்றம்** | | | | 34,514,417.00 | | | 34,514,417.00 |
| இலாப, நஷ்டத்திற்கு செலவின மாற்றத்தின் புறமாற்று | | | 145,305.96 | | | 223,699.32 | 369,005.28 |
| உதவுதொகை கணக்குக்கு பண கைமாற்றம் | | | | | | | - |
| 01/01/2017இல் உள்ளவாறு மீள்குறிப்பிடப்பட்ட மீதி | 80,308,319.34 | 3,858,594.00 | 12,194,066.55 | - | 17,416,123.94 | (19,540,679.79) | 128,750,841.04 |
| கிடைத்த மூலதன உதவுதொகைகள் | 70,270,486.63 | - | - | | - | - | 70,270,486.63 |
| பயன்படுத்துவதற்கான மூலதன உதவுதொகைக்கான கைமாற்றம் | - | - | - | | - | - | - |
| பயன்படுத்துவதற்கான மூலதன உதவுதொகையிலிருந்து கைமாற்றம் | - | - | (7,763,085.90) | | - | - | (7,763,085.90) |
| திறைசேரிக்கு/கடன் நிதியத்திற்கு கைமாற்றம் | | | (3,604,038.85) | | (5,762,064.00) | | (9,366,102.85) |
| WIP கட்டிடத்திற்கு தொடர்பான மூலதன உதவுதொகைக்கு கைமாற்றம் | (21,900,713.47) | | | 21,900,713.47 | | | - |
| கிடைத்த வட்டி வருமானம் | - | - | - | | 1,532,587.41 | - | 1,532,587.41 |
| வருமானத்திற்கு கைமாற்றப்பட்ட மூலதன உதவுதொகை | (41,459,516.52) | - | - | | - | - | (41,459,516.52) |
| ஆண்டுக்கான மேன்மிகை(பற்றாக்குறை ) | | | | | | (35,611,914.31) | (35,611,914.31) |
| 31/12/2017இல் உள்ளவாறு மீதி | 87,218,575.98 | 3,858,594.00 | 826,941.80 | 21,900,713.47 | 13,186,647.35 | (55,152,594.10) | 106,353,295.50 |

## 6.5 பணப்புழக்கக் கூற்று

### கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை
### 2016ஆம் ஆண்டுக்கு பணப்புழக்கக் கூற்று

| | 2017 | 2016 |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து பணப்புழக்கம்** | | |
| காலத்திற்கான நிகர மேன்மிகை/(பற்றாக்குறை) | (35,611,914.31) | (2,966,368.12) |
| **சீராக்கல்கள்** | | |
| மதிப்பிறக்கம் | 16,560,673.00 | 15,800,198.02 |
| விற்றொழித்தல் சொத்துக்களின் இழப்பு | (42,563.54) | - |
| இலாப, நஷ்டத்திற்கு EIA வைப்புக் கட்டணம் | 6,421,851.50 | 3,515,027.15 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 223,699.32 | 4,298.14 |
| இலாப, நஷ்டத்திற்கு செலவின மாற்றத்தின் புறமாற்று | (481,885.50) | (709,519.15) |
| பணிக்கொடை கொடுப்பனவுகள் | (41,459,516.52) | (83,990,308.56) |
| அங்கீகரிக்கப்பட்ட வருமானம் (முன்னைய ஆண்டுகளிலிருந்து கிடைத்த உதவுதொகைகளிலிருந்து) | **(54,389,656.05)** | **(68,346,672.52)** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களின் முன் தொழிற்படு மேன்மிகை/ பற்றாக்குறை** | | |
| **பற்றாக்குறை** | (363,000.00) | (505,000.00) |
